776

ஜகன் மோகினி

ஏவிளம்பி ஆடி மீ 1—8—57 25 நயா பைசா

776/4-57

கலை பேசுகிறது

மலர் 34.

OFFICE OF THE REGISTRAR OF
16 NOV 1957
MADRAS



JL
N57.34 8.
183212

ஜகன்மோகினி

ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

ஆகஸ்ட் 1957. மலர் 34, இதழ் 8. ஏவிளம்பி ஹு ஆடி மீ

பொருளடக்கம்

	பக்கம்		பக்கம்
சுதந்தர விழிப்பின் நூற்றாண்டு நினைவு —V.K. பார்த்தசாரதிஐயங்கார்	1	ஹிந்து சட்ட மாறுதல்கள் —P.M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்	16
பகவத்கீதைக் குறிப்புகள் —ராஜாஜி	7	வை.மு. ஸ்ரீ பின் தீபஸ் தம்பம் —வை.மு.விஜயலக்ஷ்மி	241-256
எங்களது இன்பச் செல்வு —T. S. ராஜகோபாலன்	9	கலைபேசுகிறது அபூர் மனிதர் —சாரக்ராகி	(ராப்பர் பக்கம் 2)
காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி சாஸ்திரி	13		

கலை பேசுகிறது

சாரக்ராகி

அபூர்வ மனிதர்

சுமார் 35 வருடங்களுக்கு முன்பு திருவல்லிக்கேணி வெங்கடாசலம் செட்டித் தெருவில் நடந்துகொண்டு இருந்த சங்கீத சபாவில் மாங்குடி சிதம்பர பாகவதரின் சீதா கல்யாண ஹரிகதா காலட்க்ஷேபம் நடைப்பெற்றது. பாகவதரிடம் வித்வத்தும், சங்கீதமும், கலையின் பண்பாடுகளும் எவ்வளவுக்கெவ்வளவு சமர்த்தியாக நிறைந்து இருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு சரீரமும் பூரித்து பாரித்து நான்குமனிதர்கள் சேர்ந்த ஒரு மனித உருவமோ இவர்? என்று ப்ரமிக்கும்படி அவ்வளவு பருமனாக இருப்பார். அந்த பருமனிலும் அவருடைய வயிறு ஒரு அலாதி தன்மையுடன் விளங்கும். ஆஜானுபாகுவாய் உயரமும் பருமனுமாய் அவர் சதஸில் வந்து நின்று ஜால்ராவை போட்டவுடன் அருகில் உட்கார்ந்திருந்த நான்கைந்து குழந்தைகள் இவருடைய தொந்தியைப் பார்த்து கடகடவென்று சிரிக்கத் துடங்கின. ஜால்ரா போடுவதை நிறுத்திவிட்டு குழந்தைகளை

[தொடர்ச்சி 24-ம் பக்கம் பார்க்க]

சுதந்தர விழிப்பின் நூற்றாண்டு நினைவு

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

"முன்னாளில் இராமபிரான் கோதமனா
தியபுதல்வர் முறையி னீன்று'
பன்னாடு முடிவணங்கத் தலைமைநிறுத்
தியவெமது பரத கண்ட
மின்னாள் இங் கிந்நாளின் முதியோளாய்ப்
பிறரெள்ள வீழ்ந்த காலை,
அன்னாளைத் துயர்தவிர்ப்பான் முயல்வர் சில
மக்களவ ரடிகள் சூழ்வாம்."

நாம் மறுத்தாலும் நம்மைவிட்டகலா

நாம் நமது சுயமதிப்பையும், சுதந்தரங்களையும், சுதேச பக்தியையும் மறந்துவிட்டாலும், நம்முடன் பிறந்தவையேயான இவ்வுணர்ச்சிகள் மட்டும் என்றும் நம்மை மறந்தோ, விட்ட கன்றோ இரா. அகத்துள் அழுந்திக் கிடந்தே வெளிக்கிளம்பும் வேளைக்கு ஏங்கிக்கிடக்கும்.

இந்தியத் தாய்நாட்டில், இந்தியரிடைச் சுயமதிப்புணர்ச்சி வித்து, ஊன்றி வேர்விட்டுத் திடத்துப் படர்ந்திருந்தும், அம்முளை வெளிக்கிளம்பியவுடனேயும், அதற்கு முன்னரேயுமாக அதனை அன்னியர் அடிக்கடி மேல் வளரவொட்டாது வெட்டி வீழ்த்தி உள்ளடக்கி, நாமே அதனை மறந்திடச் செய்வதில் முனைந்து வந்தனர். அப்படிக்கிருந்தும், தீர்க்கதர்சிகளாகிய சுய நலமற்ற நமது முன்னோர் வகுத்து வைத்த மதாசார, கலாசாரப் பண்பாடுகள், எந்நாட்டாருடையதையும் விடப் புராதனமான தும், சமரசச் சகிப்புத்தன்மை மிகுந்த வளைவு கொடுத்துச் செல்ல வல்லதுமா யிருந்ததால்தான், அன்னியரால் அடக்கி மறக்கச் செய்யப்பட்ட நமது சுயமதிப்புணர்ச்சி, நூற்றாண்டுக்கொரு முறையாவது நம்முள்ளிருந்து வீராவேச வெள்ளமாய் வெளிக் கிளம்பி, நிலைத்து நிற்க யத்தனித்து வருவதாயிற்று.

இந்தியத்தாயின் இரு கண்கள்

பதினாறும் நூற்றாண்டுவரை சுதேச மன்னர்கள், தலைமுறை தலைமுறையாக நமது இந்தியாவில் சாம்ராச்சிய ஸ்தாபனம் செய்து வந்தார்கள். பின்னர், வடக்கிலிருந்து வந்த முகலாய ருடன் சேருபவரும், எதிர்ப்பவருமென்ற நிலை வரவே, இந்திய மக்களிடை அன்னியராதிக்கத்திற்கு அடிமைப்படும் பழக்கமும், பதவி மோகமும் மூண்டு நிலைத்தது. முகலாயர், அன்னியராக இந்தியாவுள் பிரவேசித்தபோதிலும், முடிவில் இந்தியர்களாகவே நிலைத்து நின்று, ஹிந்துக்களும் முஸ்லிம்களுமென, இந்தியத் தாயின் இரு கண்களாய் விளங்கி, கலாசாரப் பண்பாடு விருத்தி யில் பரஸ்பர ஒத்துழைப்பும் மிகுந்து விளங்கினர்.

ஐரோப்பியர் கண்களை கவர்ந்தது

உலகச் செல்வக் களஞ்சியமாய் விளங்கிய நமது இந்தியா ஐரோப்பா கண்டத்தினர் கண்களை யிழுக்க, பிரஞ்சு, டச்சு, போர்த்துக்கேசியர், ஆங்கிலர் போன்றோர் சிறுகச் சிறுக இந்தியச் செல்வம் தேடி வரலாயினர். வியாபார நிமித்தமாகவே பதினேழாம் நூற்றாண்டில் ஆங்கிலர் இந்தியாவில் அடியிட்டனர். ஆயினும் ஐரோப்பிய நாட்டாரிடை போட்டிகள் எழ, மங்கியமுகலாய ராச்சியாதிபதிகளும்,உணர்ச்சிப் பொங்கிய சுதேச மன்னர்களும் இவர்களுடன் கட்சிப் பிரதி கட்சி கொண்டனர். இப்படிக்காக உள்நாட்டுச் சுதேச உணர்ச்சி வேகத்திற்கும் அன்னியர் ஆதிக்க வெறிக்கும் ஒருவகை வெளிப்படை ஒற்றுமையும் உள்ளிட்ட எதிர்ப்பும் ஏற்படலாயிற்று. 1756-ல் நேரிட்ட கல்கத்தா இருட்டறை சம்பவம், இச் சுதேச அன்னிய உணர்ச்சி யெதிர்ப்பின் விளக்கமே. அன்று முதல், இந்திய ஆங்கில வியாபாரிகள், படை பாதுகாப்புகொண்டு, சிறுகச் சிறுக, இதர ஐரோப்பிய நாட்டினரை அடக்கியகற்ற முயற்சிகள் செய்தார்கள்.

கிளைவ்வின் சூழ்ச்சி

பிரஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமாக இந்தியாவில் எதிர்ப்பு முதிர்ந்து, 1757-ல் நடந்தேறிய பிளாஸி யுத்தத்தில், ஆங்கிலக் கிளைவ், மொகலாயரை முறியடித்து, இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராச்சிய ஸ்தாபனம் ஆரம்பித்தார். ஆங்கிலக் கல்வி மூலம் இந்தியர் மனத்துள் மேனாட்டு கலாசாரப் பண்பு மோகமும், நடையுடை பாவனை அபிமானமும், அரசாங்கப் பதவி பேணும் அடிமை மனப்பான்மையும் ஊட்டப்பட்டு வளர்ந்து, சுதேசாபிமான வேகம், சிறுகச் சிறுகத் தணிந்து, சுதேசத் தலைவர்களது ஒற்றுமையின்மையும், இதைப் பயன்படுத்தி மேல்நாட்டார் கையாண்ட மித்ரபேத தந்திரமும் ஒன்றுசேர்ந்து, இந்தியரை அவருமறியாது மேனாட்டாரது அடிமைகளாக அடங்கி, அவரது கைப்பொம்மைகளாக ஆடவைப்பதாயிற்று.

விடுதலை போரின் துவஜாரோகணம்

இப்படிக்கு 1757-ல் அடக்கப்பட்ட சுதேச சுயமதிப்பு உணர்ச்சித் தணல், சரியாக ஒரு நூற்றாண்டு கழித்த 1857-ல் தீப்பற்றி வெளிவந்து, அடிமை இந்தியரும், உணர்ச்சியற்றவரல்ல என்ற உண்மையை பிரிட்டிஷாருக்கு விளக்கியது.

கடைசி மகாராஷ்டிரப் பீஷ்வா வமிசத்தவரான நாநாசாஹேப் என்பாரே 1857-ம் வருடத்திய புரட்சியை உண்டாக்கிய தீரர். அதேசமயத்தில் பாரதநாட்டு தலைசிறந்த வீராங்கனையான ஜான்ஸிராணியின் [illegible] த்யாகமும், பல தேச பக்தர்களின் வீராவேசமும ஒன்றுசேர்ந்து எழுப்பிய சுதந்திரக் கனலே இன்று நாம் அடைந்துள்ள சுயராஜ்ய ஜோதி என்றால் மிகையாகாது. ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிர்ப்புணர்ச்சி இந்தியரிடை வெளிப்

183242

படையாகப் பயமின்றி வெளிவந்து பரவியது இப்பொழுதுதான். கொழுப்புத்தடவிய தோட்டாக்களைத் தொட மதப்பற்று மிக்க இந்தியச் சிப்பாய்கள் ஆக்ஷேபிக்க, அப்படைகளைக் கலைத்திட ஆங்கில அதிகாரிகள் முன்வந்ததே சுதேசப் புரட்சியைத் துரிதப்படுத்தி, உணர்ச்சிக் கொதிப்பை வெளிப்படுத்தியது. பாரத பூமியின் விடுதலைப் போரின் துவாஜாரோகணம் இதுவே. கனவிலும் கருதாத இச்சுதேச உணர்ச்சித் தீ வேகத்தையும், ஆங்கில உயிர்கள் ஆயிரமாயிரக் கணக்கில் அத்தீக்கு ஆகுதியாகி வருவதையும் கண்டதுமே கம்பெனியார் கண்விழித்தனர். வெள்ளையரது ஆதிக்கவேக வெள்ளம் பல திசைகளினின்றும் படைபடையாய்ப் புரண்டோடி வந்து இவ்வுணர்ச்சித் தீயைச் சீக்கிரத்திலேயே அவித்தது. இதுவரைக் கிழக்கிந்திய கம்பெனியார் வசமிருந்த இந்திய ஆட்சியும் அதிகாரமும், 1858-ல் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வசம் நேரிடையாக மாற்றப்பட்டது. ஆங்கில ராஜப்பிரதிநிதிகளான வைசிராய்கள் இந்தியா வந்து, பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவில் வேரூன்ற வளர்த்தனர்.

1877-ல், பிரிட்டிஷ் மகாராணி விக்டோரியாவும், இந்திய சக்கரவர்த்தினி யென்ற பட்டம் வகித்து, நமக்குப் பொன்விலங்கு பூட்டி, சீராட்டி வளர்க்க, மேனாட்டு மோகத்தில், இந்தியராகிய நாம் நமது பாரதத் தாயை மறந்ததோடு, அநாகரிகப் பைசாச மென அவளைப் பழித்துப் பரிகசித்துப் புறக்கணிக்கவும் நன்கு பழக்கப்பட்டுத் தேர்ச்சிபெற்று விளங்கினோம். அப்படியிருந்தும், நமது அந்தராத்மா, நம்மைப் பிறர் கை ஒப்பாததாகவே யிருந்தது. நமது சுயமதிப்புணர்ச்சித் தணலை அவியாத சிறு பொறியாகவேனும் பாதுகாத்து வைத்திருந்தது. அதனை விசிறித் தணலாக்கித் தீ மூட்டவல்ல தலைவர்கள் தலையெடுத்த காலத்திலெல்லாம் இவ்வுணர்ச்சியை வெளிவிட்டே வந்துகொண்டிருந்தது.

சுதந்திர விதையை விதைத்த ஸ்காட்லாந்த் வீரர்

நாமும் மனிதர்களேயென்பதை நம்மை அடக்கியாண்டோருக்கும் நமக்குமாக எடுத்துணர்த்தி, நம்முள் அடைந்து கிடந்த ஆன்மபலத்தை, எவ்வகை மிருக பலத்தாலும் நிரந்தரமாய் வருத்தி அடக்கிவைக்க முடியாதென்ற இயற்கையுண்மையை யுணர்த்தி, நமது சுய மதிப்பை நாம் மறவாது வளர்த்தோங்க வைக்கும் ஸ்தாபனமொன்றை நாம் நிறுவி வளர்த்தல் அவசியமென்பதை நமக்கு அறிவித்தது, ஓர் அன்னியரே. இந்திய சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தராயிருந்த **அல்லன் ஆக்டேவியன் ஹ்யூம்** என்ற ஸ்காட்லாந்தியரே. 1883ல், ஐ. ஸி. எஸ். தேர்தல் கோருவதில் இந்தியருக்கும் பிரிட்டிஷாருக்கும் அரசாங்கத்தார் பாரபக்ஷங் காட்டியதைப் பொருதவராய், மானிடகுலத்தாரெவரும் சம உரிமை கொண்டவர்களேயென்ற சுய மதிப்புணர்ச்சியை எடுத்துக் காட்டி, பின் வளர்ந்தோங்கவல்ல திடத்த சுய ஆட்சி விருக்ஷத்தின் வித்தைப்போல, **இந்திய நேஷனல் யூனியன்** என்ற, ஐம்பது அங்கத்தினர் கொண்டதோர் ஸ்தாபனத்தை, இந்தியர் உரிமைகளைப் போராடக் கூட்டிவைத்தார். இந்த வித்தினின்றுமே இந்திய நேஷனல் காங்கிரஸ் சபை முளைத்து, 1885 டிசம்பர் 28 தேதியன்று பம்பாயில், பானர்ஜீயவர்கள் தலைமையில், தாதாபாய் நௌரோஜியின் உழைப்பால், பிரோஷ் ஷாமேதா, கே. டி. டிலாங் என்பவர் போன்ற இணையற்ற தேசிய வீரர்களது ஒத்துழைப்புக்கொண்டு ஸ்தாபிதமாயிற்று.

பிறப்புரிமையை போதித்த திலகர்

1906 வரையில் காங்கிரஸ் ஸ்தாபனம் சர்க்காரிடம் வேண்டுகோள் விடுவதிலேயே காலம் கழித்தது. அப்போது திலகர் அமிதவாத கட்சியை ஸ்தாபித்து தலைவராய் விளங்கினர். "**சுயராஜ்யம் நமது பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவோம்**" என்ற வேதமந்த்ர கோஷம் போன்ற தீர வாக்யத்தை பாரதநாடு பூராவும் கனல்போல் பரவச் செய்த மகானை சர்க்கார் சிறையில்யிட்டு துன்புறுத்தினர்கள்.

அன்னிய மாதின் அபார தியாகம்

இந்திய அரசியல் இந்நிலையில் கொதிப்புண்டிருக்கையில் தான், பெஸண்ட் அம்மையார், சென்னை ராஜதானி முழுவதும், கிராமத்திற்குக் கிராமமும் கிளைவிட்டுப் பரவிய தனது ஹோம் ரூல் லீக் விருக்ஷத்தைச் சென்னையில் நட்டு, நியூ இந்தியா காமன்வெல்த் என்ற பத்திரிகைகள் மூலமாகத் திடந்த சுதேசி எருப்போட்டு, வீராவேசமெழுப்பும் சொற்பொழிவுகளென்ற நீரூற்றி, பூர்ண சுராச்சியக் கிளர்ச்சி, முதியோர் முதல் குழந்தைகள் வரை தீக்கொண்டு ஏற்கும் படிப் பிரசாரம் நிகழ்த்துவரலாயினர். இது கண்டு நடுநடுங்கிய அரசாங்கத்தார் அவ்வம்மையைச் சிறைப்படுத்தி இயக்கத்தை அடக்கப்பார்த்தார்கள். ஆனால், இச்சிறை காரணத்தால் இந்தியா முழுதும் சுதேசி உணர்ச்சி அரு உச்சநிலையடைந்து மிதவாதம் மறைந்து அமிதவாதமோங்கி, பெரும் புரட்சியெழும் நிலைமை வந்தது.

திலகரின் ஆசியும், காந்தியின் சேவையும்

'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என இமய முதல் குமரிவரைச் சுதந்திர தாகமெழுப்பி வளர்த்துவந்த லோகமான்ய பாலகங்காதர திலகர், 1920-ல் மண்ணுலகு நீத்தார். மகாத்மா காந்தி, 1920 அக்டோபர் முதல் தேதியன்று தனது சுதந்திரப் போராட்டத்தைப் புது முறையில் துவக்கப்போவதாக முன்னறிக்கை விட்டிருந்தார். திலகரும் அதற்கு முந்திய இரவு, ஆகஸ்டு 31-ல், காந்தியையும் அவர் முறைகளையும் ஆசீர்வ

இத்து, தான் பிடித்தேந்தி வந்த சுதந்திரக் கொடியைக் காந்தி கையிலொப்புவித்து, மனச்சாந்தியுடன் நிரந்தரச் சாந்தி பெற்ருர் இம்மண்ணுலகை நீத்து. இக்கால முதல் இந்திய சுதந்திரச் சரிதை காந்திமகானது போராட்டச் சரிதையேயாகும்.

காந்தீ யுகத்தில் வெற்றி !

திலகர் ஆசீர்வதித்து கொடுத்த தேசக்கொடியை நிரந்தர— சுதந்திர கொடியாக பாரதநாட்டில் ப்ரகாசத்துடன பறக்கச் செய்வதற்காக மகாத்மா காந்தி கையாண்ட சாத்வீக முறைகள் ஒன்று இரண்டல்ல. கதர் அபிவிருத்தியிலிருந்து ஹரிஜன முன்னேற்றம் வரையில் தேசத்தில் அன்பு, அஹிம்சை, ஐக்யம் இவைகளை நிலைநாட்ட பலமுறை சிறை சென்றும், உண்ணுவிரதங்கள் இருந்தும், சாத்வீக சத்யாக்ரஹப் போர் நடத்தியும் தொண்டு புரிந்த பெருமை உலகம் பூராவும் அறிந்ததே ஆகும். அவருடன் பக்கபலமாக மகாமேதைகளான தலைவர்கள் படேல், நேருஜி, ராஜாஜி, ராஜேந்திரப்ரசாத், அபுல்கலாம் அஸாத், சரோஜினிதேவி போன்ற பலபேர்கள் ஒத்துழைப்பினுல் தேசத்திற்கு மகத்தான வெற்றியை வாங்கி கொடுத்தார். காந்திஜீ காட்டிய வழியில் ஆயிரக்கணக்கான பெண்களும், தொண்டர்களும் பின்பற்றி தங்களுடைய கடமையை தேசத்திற்கு செய்து சுதந்திரதேவியின் விலங்கு முறிந்துவிழ புனிதத் தொண்டாற்றினார்கள். இதில் மிஸஸ் கஸின்ஸ்-ம் ஒருவராவர்.

வெற்றிக் கொடி தாங்கும் வீரர்

1857-ல் மூட்டிய சுதந்திர கனல் 1947-வது வருடம் ஆகஸ்டு 15-ந்தேதி அன்று சுதந்திர தீப ஜோதியாக பாரதநாட்டிலெங்கும் ப்ரகாசிக்கத் தொடங்கியது. இன்று 1957-ம் வருடம் ஆகஸ்டு 15-ந் தேதி சுதந்திரம் பெற்று பத்து வருடம் ஆகிவிட்டது என்ற பெருமையை அடைந்திருந்தபோதிலும் அதை கைவிடாமல் என்றென்றும் காப்பாற்ற வேண்டியது நம் கடமை என்பதை ஒவ்வொருவரும் ப்ரதிதினமும் நினைத்துக்கொள்ள வேண்டியது நம் முதல் உரிமையாகும். "சுயராஜ்யம் எமது பிறப்புரிமை, அடைந்தே தீருவோம்" என்று கோஷித்த திலகரின் வாக்கை இதயத்தில் பதித்து "அடைந்த சுயராஜ்யத்தை கைவிடவேமாட்டோம், இது எமது பிறப்புரிமை" என்று பாரத நாடு பூராவும் கோஷிக்க வேண்டும். இந்த நாதவெள்ளம் பாரத தாயின் செவிகளில் அமுத வெள்ளமாக பாய்ந்து சிரஞ்சீவி தன்மையை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

திலகர் தம் காலத்தில் காணுத சுதந்திரத்தை மகாத்மாநமக்கு வாங்கிக்கொடுத்தார். கடவுளின் கருணையும், பொதுமக்களின் ஒத்துழைப்பும் ஒன்றுகூடி நாம் பெற்ற சுதந்திரம் 'சாகாவரம் பெற்று சிரஞ்சீவி'யாக தழைத்தோங்க வேண்டும்.

பகவத்கீதைக் குறிப்புகள்

ராஜாஜி

பதினாறுவது அத்தியாயம்.

இந்த உலகத்திலுள்ள மக்கள் இருவகையானவர். தைவ பிரகிருதி ஒருவகையர். அசுர பிரகிருதி மற்றையவர்.

தைவ பிரகிருதியைப் படைத்தவர்களுக்குப் பயம் என்பது கிடையாது. உள்ளத்தில் சுத்தம் நிலைத்து நிற்கும். அறிவும் புலனடக்கமும் பெற்றிருப்பர். பிறருக்கு உதவும் குணம் பெற்றிருப்பர். அடக்கம், தியாகம், படிப்பு சீலம் உள்ளவர்களாக இருப்பர். பிறருக்கு தீமை உண்டாக்கமாட்டார். உயிர்கள்பால் கருணைகொண்டிருப்பார். உண்மையைக் கடைப்பிடிப்பர். கோபம் இராது. அவர்கள் உள்ளம் எப்போதும் சாந்தமாகவே இருக்கும். இனிய சொல்லும் தயையும் கொண்டு நடப்பார்கள். இதிலும் அதிலும் ஆசைப்பட்டு அலையமாட்டார்கள். எதையும் பொறுமையுடன் தாங்குவார்கள். கர்வம் கொண்டு ஆடமாட்டார்கள். அடக்கத்துடன் நடந்துகொள்வார்கள். அவர்கள் முகத்தில் ஞானஒளி வீசும்.

அசுர பிரகிருதி மக்களோ டம்பத்தில் ஈடுபடுவார்கள். கர்வம்கொண்டு நடப்பார்கள். கோபிப்பார்கள். கொடுமை செய்வார்கள். அறியாமையில் அலைவார்கள். எது செய்ய வேண்டும் எது செய்யத் தகாது என்பதை அறியமாட்டார்கள். அவர்களிடம் சுத்தம் கிடையாது. ஆசாரம் கிடையாது. உண்மையும் கிடையாது. கடவுள் இல்லை, ஆண்டவன் இல்லை என்பார்கள். எல்லாம் காமத்தாலும், ஆசையாலும் நடைபெறுகிறது என்பார்கள். கெட்ட காரியங்கள் செய்வார்கள். உலகத்துக்குத் தீமை உண்டாக்குவார்கள். தாங்கள் எண்ணுவதே சரி என்று பிடிவாதமாகத் துஷ்ட காரியங்களில்ஈடுபடுவார்கள். அவர்கள் ஆசைக்கு எல்லையே இராது. பொருளற்ற இன்பங்களைப் பெரிதாகக் கருதிக் காமத்திலும் கோபத்திலும் அகப்பட்டு அலைவார்கள். அநியாய வழிகளில் பொருள் சேர்ப்பார்கள். இதை இன்று சம்பாதித்தேன். இதை இன்று அடைந்தேன். நாளை நான் இதைச் சம்பாதிப்பேன். இதையும் அடைவேன் என்று செல்வம் சேர்ப்பதே யோசனையாக இருப்பார்கள். அவனை இன்று கொன்றேன். நாளை அந்தப் பகைவனை ஒழிப்பேன். நான் அரசன். நான் ஈசன்.

நான் பெரும் பதவி அடைந்துவிட்டேன், எனக்குச் சமானம் யார், நான் வேண்டியபடி தானம் செய்வேன், சுகம் அனுபவிப்பேன்,—இவ்வாறு மோகத்திலும் அறியாமையிலும் மூழ்கி நரகம் போய்ச் சேருவார்கள். அவர்கள் தானங்களும் வேள்விகளும் செய்வார்கள். ஆனால் அவை அகங்காரமும், ஆசையும் கோபமும் நிறைந்த காரியங்களாகும். உண்மை வேள்விகளோ தானமோ ஆகா. ஆண்டவனை வெறுப்பார்கள். தம் உயிரிலும் பிற உயிர்களிலும் இருக்கும் தெய்வத்தைத் துவேஷிப்பார்கள். மறுபடியும் மறுபடியும் அசுர ஜன்மம் எடுப்பார்கள். அவர்களுக்கு நற்கதி கிடையாது.

நரகத்துக்கு மூன்று வாயில்கள் உண்டு. அவற்றில் புகுந்து மக்கள் அழிந்து போகிறார்கள். சிற்றின்பவேட்கை, கோபம், பொருளாசை இவை மூன்றுமே மக்களை அழிக்கும் நரக வாயில்கள். காமம், குரோதம், உலோபம், இந்த மூன்றையும் நீக்கி மேல் பதவி அடையும் நல்வழியில் நடப்பாயாக. இதைத்தான் சாஸ்திரங்கள் போதிக்கின்றன. சாஸ்திர உபதேசங்களைப் புறக்கணித்தால் இகத்தில் சுகமும் இல்லை. பரகதியும் இல்லை. சாஸ்திரம் எதை வேண்டாம் என்கிறதோ, அதைத் தவிர்த்தும் எதைச் செய் என்கிறதோ அதைச் செய்தும் வாழ்க்கையை நடத்துவாயாக!

—●—

இந்தியாவில் 6,570 பத்திரிகைகள்

ஹிந்தியில்தான் மிகவும் அதிகமான பத்திரிகைகள்

இந்தியாவில் சஞ்சிகைகள் உள்பட 6,570 பத்திரிகைகள் இருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் ரிஜிஸ்டரார் முதலாவது ஆண்டறிக்கையில் கண்டிருக்கிறது; அந்த அறிக்கையை யூனியன் செய்தி-ஒலிபரப்பு மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் 1957 ஜூலை 22-ந் தேதி திங்கட்கிழமை லோக் சபாவில் சமர்ப்பித்தார். 1956 ஜூலை 1-ந்தேதி முதல் டிசம்பர் 31-ந் தேதிவரை உள்ள காலத்துக்கு சம்பந்தப்பட்ட இந்த அறிக்கைப்படி மொத்தம் தினசரிகளும், சஞ்சிகைகளும் சேர்ந்து 1,254 பத்திரிகைகள் உள்ள ஹிந்திதான் ஏராளமான பத்திரிகைகள் உள்ள பாஷை என்று தெரியவந்திருக்கிறது.

எல்லா ராஜ்யங்களையும்விட பம்பாய் ராஜ்யத்தில்தான் மிகவும் அதிகமான பத்திரிகைகள்-1,271, வெளியிடப்படுகின்றன. மேற்கு வங்காளத்தில், அடுத்தபடியாக, 1,129 பத்திரிகைகள் பிரசுரமாகின்றன; உத்தரப் பிரதேசத்தில் 756; சென்னையில் 717; டில்லியில் 560 பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன.

தேசத்தில் மொத்தம் 476 தினசரிகளும், 2,506 சஞ்சிகைகளும், 1,903 வார இதழ்களும், 598 மாதமிருமுறை சஞ்சிகைகளும் வெளியாகின்றன. மொத்த விநியோக எண்ணிக்கையில் ஆங்கில பத்திரிகைகளுக்கே முதல் ஸ்தானம்-23.8 லட்சம். அடுத்தபடியாக ஹிந்தி 16·0 லட்சம்; தமிழ் 2·7 லட்சம், குஜராத்தி 8·6 லட்சம், மராத்தி 6·7 லட்சம், உருது 6·1 லட்சம், வங்காளி 4·0 லட்சம், மலையாளம் 3·5 லட்சம், தெலுங்கு 3·3 லட்சம், கன்னடம் 3·2 லட்சம்.

—(○)—

எங்களது இன்பச் செலவு

ஸ்ரீமான் T. S. ராஜகோபாலன், B.A., L.T.,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

8. புஷ்கரம், ஆஜ்மீர்

வரையேஇ லாத கடலேழு மேழு
வரையோடு வானு(ம்) நிலனும்
வரையேஇ லாத குறளாகி வந்து
கழலால்அ ளந்து முனநாள்
விரலால்எ டுத்த வரையால்அ டுத்த
மழையே தடுத்த அருளான்
வரையாது யர்ந்த புனலாகி மாந்தர்
வினையாய மாய்க்கு மினிதே.

[வரையாது உயர்ந்த புனல் ஆகி - தூய்மைக்கு எல்லையில்லாமல், மேன்மை கொண்ட புஷ்கர தீர்த்த வடிவமாகி]

எங்களது ரெயில் வண்டி ஆஜ்மீர் ஜங்க்ஷனை அணுகுங்கால் எங்களுள் மூதுவர் பின்வரும் சுலோகத்தை இசைத்துக் களிப்புற்றனர்.

ஸ்ரீரங்கம் கரிசைல மஞ்ஜநகிரிம், தார்க்ஷ்யாத்ரி
ஸிஹ்மாசலெள, ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ் ச
பதரீநாராயணம் நைமிசம் |
ஸ்ரீமத்-த்வராவதீ ப்ரயாக மதுரா (அ)யோத்யா
கயா புஷ்கரம், ஸாளக்ராமகிரிம் நிஷேவ்ய
ரமதே ராமாநுஜோயம் முநி: ||

இதன் கருத்து: ஸ்ரீரங்கம், அத்திகிரி, திருப்பதி, கருடபர்வதம் (திருநாராயணபுரம்), ஸிம்ஹாசலம், ஸ்ரீகூர்மம், ஜகந்நாத க்ஷேத்ரம், பதரிகாச்ரமம், நைமிசாரண்யம், த்வாரகை, ப்ரயாகை, மதுரை, அயோத்தி, கயா, புஷ்கரம், சாளக்கிராமம் ஆகிய இந்தத் தலங்களில் ஸ்ரீராமாநுஜர் சென்று பணிந்து மகிழ்வெய்துகிறார். நான் இந்த சுலோகத்தைக் கேட்டுக் களிப்புற்றேன். இறைவனது பேரருளால், எங்கள் பள்ளிக் கூடத் தலைவரின் பெரு முயற்சியால், நாங்கள் மேலுள்ள தலங்களில் இரண்டு மூன்று நீங்கலாக மற்ற இடங்களுக்குச் சென்று ஆண்டவனது திருவடிகளில் பணிந்து மகிழ்ந்துள்ளோம். புனித தீர்த்தங்களுள் மேன்மையுற்றதான ஸ்ரீபுஷ்கரம் சென்று புனிதப் புனலில் குடைந்தாடப் போகிறேன் என்ற மகிழ்ச்சி என் மனதில் குடிகொண்டிருந்தது.

ரெயில் வண்டி, ஆஜ்மீர் ஸ்டேஷன் மேடையில் நின்றதும் எங்களை வரவேற்க இரண்டு பெரியோர்கள் வந்திருந்தனர். காலை 8 மணி சுமாருக்கு நாங்கள் மோட்டார் பஸ்ஸுக்களில் ஏறிக்கொண்டோம். பஸ்ஸுக்கள் வடமேற்கில் விரைந்தன. பதி

ஐந்து நிமிஷ காலத்தில் நாங்கள் இரண்டு மலைத் தொடர்களுக்கு இடையேயுள்ள கணவாய் வழியே சென்று கொண்டிருப்பதைக் கண்டோம். சிறிது நேரத்திற்கெல்லாம் புஷ்கரத்தில் ஸ்ரீவைகுண்ட நாதன் கோயில் வந்து சேர்ந்தோம்.

புஷ்கரம், ஆஜ்மீர் ஜங்க்ஷனிலிருந்து 7 மைல் தொலைவிலுள்ளது. இங்குள்ள ஏரி, புனிதமான தீர்த்தங்களுள் முதலானது. இங்கு இறைவன், இந்த ஏரி வடிவமாகவே விளங்குகிறுன் என்பது பெரியோர்களது அபிப்பிராயம். ஆதலால் யாத்திரிகர்கள் இந்த ஏரியில் குடைந்தாடிப் பின்னர் தீர்த்த ரூபியாகிய எம்பெருமானுக்கு பூஜை நைவேத்யங்கள் செய்து வழிபடுகின்றனர். ஒவ்வொரு வருஷமும் இங்குக் கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசி முதல் பௌர்ணமிவரையில் திருவிழா (மேளா) நிகழ்கின்றது. முன்னொரு காலத்தில் பிரமன் இங்கு மிகப் புனிதமான தீர்த்தம் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென எண்ணங் கொண்டான். அப்போது அவனது கைத்தலத்தில் தாமரைப்பூ ஒன்று தோன்றியது. அதிலிருந்து பேரொலியுடன் தண்ணீர் பாய்ந்து மூன்று பிரிவுகளாகத் தேங்கியது: இப்பிரிவுகள் ஜ்யேஷ்ட புஷ்கரம், மத்ய புஷ்கரம், கனிஷ்ட புஷ்கரம் எனப் பெயர் பெற்றன. "புஷ்கரம்" என்பது தாமரை மலருக்குப் பெயர். தாமரை மலரிலிருந்து இந்த ஏரிகள் உண்டாயின என்று புராணம் கூறுவதால், இத்தலம் புஷ்கரம் எனப் பெயர் பெற்றது.

இந்தத் தலத்தில் நெடுநாள் வரையில் பூஜை நைவேத்யங்கள் தீர்த்த ரூபியான பெருமானுக்கே நிகழ்ந்து வந்துள்ளன. நாளடைவில் தென்னாட்டுப் பாணியில் இரண்டு கோயில் நிருமிக்கப்பெற்றன. இவற்றுள் ஒன்று புராண் ரங்க்ஜீ கா மந்திர் (பழையதான, ரங்கநாதன் கோயில்), மற்றது நயா ரங்க்நாத் மந்திர் (புதியதான, ரங்கநாதன் கோயில்). இவை இரண்டும் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமப்படி நடத்தப்பெறுவதால் தென்னாட்டு வைஷ்ணவர்கள் பத்தெட்டுக் குடும்பத்தினர் குடியேறியுள்ளனர், இத் தலத்தில். இக்கோயில்கள் கோட்டைபோல் அமைந்துள்ளன. கோட்டைக்குள் கோயிலைச் சுற்றி நாற்புறத்திலும் மாடவீதிகள் அமைந்துள்ளன. இந்த வீடுகள், கோயிற் பரிகரங்களுக்கானவை. கோயில்கள் பெரியவை; தென்னாட்டுக் கோயில்கள் போல் அர்த்த மண்டபம், மஹா மண்டபம், விமானம், ப்ராகாரம், த்வஜ ஸ்தம்பம், பலிபீடம், நாலுகால் மண்டபங்கள், யாகசாலை முதலியன வாய்ந்தவை. கோயிலிலுள்ள பரிகரங்கள் அனைவரும், தென்னாட்டு அநுஷ்டானம் சிறிதும் வழுவாமல் நடந்து கொள்கின்றனர்.

நாங்கள் நயா ரங்க்நாத் மந்திரில் (ஸ்ரீவைகுண்டநாதன் கோயிலில்) ஒரு மாளிகையில் தங்கினோம். இது ஸேட் ஒருவரால் நிருமிக்கப்பெற்றுள்ளது. தென்னாட்டிலிருந்து வரும் யாத்ரீகர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கின்றனர் தேவஸ்தானத்தார். நாங்கள் உள்ளே நுழைந்ததும் எங்களுக்காக இட்லியும் காபியும் தயாராக இருப்பதைக் கண்டோம். கோயிலுக்

குள் எல்லாம் தமிழ் நாட்டு மயமாகவே இருந்தது. ஆங்குள்ளோர் எங்களைச் சூழ்ந்துகொண்டு தமிழிலேயே பேசிக் களித்தனர். சிறு குழந்தைகளுங்கூட, "மாமா, வாருங்கள்; என்ன வேண்டும்?" என்று அன்பளாவ ஆரம்பித்தனர்.

இந்தக் கோயிலிலிருந்து ஒரு பர்லாங்க் தொலைவிலுள்ளது ஜ்யேஷ்ட புஷ்கரம். இதன் நான்கு பக்கங்களிலும் நீராடப் படித்துறைகள் உள்ளன. இதில் முதலைகள் அதிகம்; ஆதலால் இரண்டொரு இடத்தில்தான் இறங்குவார்கள்; இந்த இடங்களில் காவலாளர் பெருந்தடி கொண்டு தண்ணீரில் அடித்த வண்ணமாகவே இருக்கின்றனர், முதலைகள் கரையை அணுகா வண்ணம். நாங்கள் செல்லும்போது முதலைகள் இல்லையென்றும் பயப்படவேண்டாம் என்றும் சொல்லிக்கொண்டார்கள்; எனினும் எங்களுக்கு நடுக்கந்தான்; நாங்கள் துடையளவு தண்ணீரிக்குக் கீழ் இறங்கவில்லை.

நீராட்டத்தை முடித்துக்கொண்டு ஏரிக்கரையிலிருந்து சுற்றுப் புறங்களை உற்று நோக்கினேன். தெற்கிலும் வடக்கிலும் நீண்ட மலைத் தொடர்கள் விளங்கின; கிழக்கிலும் மேற்கிலும் ஆங்காங்கு குன்றுகள் தென்பட்டன. ஆங்காங்கு வடநாட்டு முறைப்படி நிருமிக்கப்பெற்ற தேவாலயங்களும், நீர்நிலைகளும் மலிந்துள்ளன. புஷ்கரம் என்ற தலம், ஒரு பள்ளத்தாக்கிலுள்ளது; அதைச் சுற்றிலுமுள்ள இயற்கை வனப்பு மிகவும் போற்றத்தக்கதாகும்.

நீராடி முடிந்ததும் நாங்கள் புராண் ரங்க்ஜீ கா மந்திருக்குச் சென்றோம். தேவாலயம் சிறிது பாழடைந்திருந்தது; வருவாய் குறைந்திருப்பதே இதன் காரணமாகும். உள்ளே யுள்ள ஸந்நிதிகள் நன்கு பரிபாலிக்கப்பெற்று வருகின்றன. ஆங்கு இருந்த அர்ச்சகர் எங்கள் யாவரையும் அன்புடன் அழைத்து ஸந்நிதிகளில் நன்கு சேவை செய்வித்தார். ஸ்ரீரங்கநாதனையும், பிராட்டியையும், க்ருஷ்ணனையும் திருவடி தொழுது, நயா ரங்க்நாத் மந்திருக்குச் சென்றோம்.

அண்மையில் கட்டப்பெற்ற இந்த ஆலயம், நவீன முறைப்படி அமைந்துள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் நெடிய கோபுரங்கள் உள்ளன. கொடிமரமும் பலிபீடமும் தங்க மயமானவை; விமானம் உயர்ந்த வேலைப்பாடு வாய்ந்தது. பிராகாரம் பெரியது; நல்ல நிலையில் வைத்துக் கொள்ளப்படுகின்றது. திருவிழாக் காலத்தில் உபயோகத்திற்காக தங்கமயமான வாகனங்கள் உள்ளன. கர்ப்பக்ருஹத்தில் ஸ்ரீவைகுண்டநாதன், ஸ்ரீபூமி, நீளைகளுடன் "ஐந்து பைந்தலை ஆடரவின் மேல்" அமர்ந்து,காண்போரது கண் குளிருமாறு மைத்த மேனியிலே கலன்கள் பல அணிந்து காட்சி யளிக்கிறார். நாங்கள் சென்றபோது நவராத்ரி யாதலால் நாச்சியார் வெளியிலுள்ள மண்டபத்தில் எழுந்தருளியிருந்தார்; வலப் பக்கத்தில் ஸ்ரீநிகமாந்த தேசிகன் எருந்தருளியிருந்தார். பிராகாரத்தில் பெரியோர்கள் பாராயணஞ் செய்து கொண்டிருந்தனர். இவ்வாறான வைபவம் தென்னாட்டிலே சில கோயில்

களிலேதான் காணமுடியும் என்பது மிகையாகாது. பிராகாரத்தி லுள்ள சுவர்களில் பௌராணிக வரலாறுகள் சித்திரங்களாக வரையப் பெற்றுள்ளன. சித்திரங்கள் மிக நேர்த்தியானவை; இவற்றை நாங்கள் நெடுநேரம் பார்த்து வியப்புற்றோம்.

நடுப் பகலில் தென்னாட்டு முறைப்படி எங்களுக்கு "பஞ்ச பக்ஷ்ய பரமான்ன" போஜனம் அளித்தார்கள் அதிகாரிகள். போஜனத்திற்குப் பிறகு நாங்கள் விடைபெற்றுக் கொண்டோம். கோயில் அதிகாரிகளுக்குக் குறைதான், நாங்கள் முழு நாளும் அங்கே தங்கவில்லையென்று. ஆஜ்மீர் நகருக்குத் திரும்பும்போது எல்லையில் ஜைநர் கோயில் ஒன்றுள் சென்றோம். கோயில் பெரிய கட்டிடம்; இரண்டு மாடி கொண்டது. மாடி இரண்டிலும் செய்யப்பெற்றுள்ள அலங்காரத்தைச் சுற்றிப் பார்த்துவர அரை மணிக்குமேல் ஆயிற்று. ஆலயத்திற்குள் எங்களை அனுமதிக்க மறுத்துவிட்டார்கள்; எனினும் கோயிலின் அமைப்பு, வேலைப் பாடு முதலியன எங்களுக்கு வியப்பை ஊட்டின.

ஆஜ்மீர் - புஷ்கர் நெடுஞ் சாலை, ஓர் ஏரிக் கரையில் அமைந் துள்ளது. மிகப் பரந்துள்ள இந்த ஏரி, அனாஸாகர் (Anasagar) எனப் பெயர் வாய்ந்தது. இதன் கரையில் அழகான கட்டிடங்கள் உள்ளன; இவை வெள்ளைச் சலவைக் கற்களாலானவை. இவற் றுள் ஒன்றில் நாங்கள் சிறிது தங்கிச் சுற்றியுள்ள இயற்கை வனப்பைக் கண்டு களித்தோம், அருகிலுள்ள பூங்கா (Park) மிகப் பெரியது; மரங்களும் பூஞ்செடிகளும் செறிந்து, அழகாகத் திகழ்கின்றது. இதற்கு தௌலத் பாக் (Doulat Bagh) எனப் பெயர்; இதனை கார்டன் அப் ஸ்ப்லெண்டர்ஸ் (Garden of Splenders) என் றழைக்கின்றனர்; இதன் பொருள் "சீர்மையே உருக்கொண்ட பூங்கா" என்பதாம்.

ஆஜ்மீர் நகரம், தாரகார் குன்றின் (Taragarh Hill) அடிவாரத் தில் அமைந்துள்ளது. இங்குள்ள கட்டிடங்களில் நடுவில் திகழ்வது தாரகார் கோட்டையாகும். இந்நகரம் மிகவும் புராதன மானது. கஜ்னி மாமுது இதை 1024-ஆம் ஆண்டில் தாக்கினார்; பின்னர் 1193-ஆம் ஆண்டில் கோரி மாமூது இதனுள் சேனை யுடன் நுழைந்து தன் பொருமைக் கனலைப் பரப்பினார். 1536-ஆம் ஆண்டில் அக்பர் சக்ரவர்த்தி இதில் தமக்காகக் கோட்டை யொன்றை நிருமித்தார். இது இப்போதும் நகரத்தின் நடுநாயக மாய்ப் பொலிந்துள்ளது. இது சதுரவடிவமானது; ஒவ்வொரு மூலையிலும் எண்கோண வடிவமுள்ள உப்பரிகையுள்ளது. அனா ஸாகர் ஏரிக் கரையிலுள்ள மண்டபங்கள் யாவும் ஷாஜஹான் மன் னரால் அமைக்கப் பெற்றவை; இவை இம்மன்னரது மனப் பான்மைக்கு அறிகுறியாக விளங்குகின்றன.

நாங்கள் மாலை 6 மணிக்கு தர்கா க்வாஜா (Darga Khwaja) என்ற இடத்திற்குச் சென்றோம். இதிலுள்ள மேடையில், க்வாஜா முயின்-உத்தீன் கிஸ்தி (Khwaja Muin-Uddin Chisti) என்ற பெரியார் சமாதிகொண்டிருக்கிறார். இவர் 1235-ஆம்

காளிதாஸர் கனவு

11, இராம தர்சனம்: ரகுவம்சம்.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

மீண்டும் காளிதாசா என்னிடம் கூறினார். "இப்படிக் கற்பனை உலகத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களால் சந்திரகலாதேவியைவிட்டு நான் பிரிந்த துயரம் கொஞ்சம் ஆறுதலடைந்தாலும் அது தீரவேயில்லை தீரவே தீராது. அவளை விண்ணுலகில் எப்பொழுது கண்டு களிப்போனோ? விக்கிரம ராஜ்யம் வெகுச் சிறப்பாக இருந்தாலும் நம்முடைய தாய் நாட்டில் அறங்குன்றிப்போய் அதர்மம் தலையெடுத்து விடுமோ என்று எனக்கு அச்சம். ஆகையால் தான் ராம ராஜ்யத்தை வர்ணித்து அதை நம்முடைய பாரத நாட்டில் நிலைநிருத்தவேண்டும் என்று என்னுடைய பேரவா. இந்த எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு தான் "ரகுவம்சம்" என்ற மகா காவ்யத்தை நான் இயற்றினேன். அந்த முயற்சிக்கு ஆதிகவி வால்மீகிதான் மூல காரணம்."

தத்ஸர்வம் தத்வதோ த்ருஷ்ட்வா தர்மேண ஸமஹாத்யுதி: |
அபிராமஸ்ய ராமஸ்ய சரிதம்கர்துமுத்யத: ||
காமார்த்த குணஸம்பன்னம் தர்மார்த்தகுண விஸ்தரம் |
ஸமுத்ரமிவ ரத்னாட்யம் ஸர்வச்ருதிமனோஹரம் ||
ஸயதாகதிதம் பூர்வம் நாரதேன மஹர்ஷிணா |
ரகுவம்சஸ்ய சரிதம் சகார பகவான் ரிஷி: ||

ஆண்டு இம்மண்ணுலகை விட்டு அமரவாழ்வெய்தினார். இந்த இடம் முகம்மதியர்களுக்கு முக்கியமான யாத்திரைத் தலமாகும். இங்கு வருஷந்தோறும் திருவிழா ஒன்று நடக்கின்றது. இந் நகரில் அர்ஹை-தின்-கா-ஜோம்ப்ரா (Arhai-din-ka-jhompra) என்ற மசூதியொன்று சிற்ப வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றது; இது 1235-ஆம் ஆண்டு நிருமிக்கப் பெற்றது. இது நகருக்கு வெளியில் சிறிது தொலைவில் இருப்பதால், இதைப் பார்க்க எங்களுக்கு வாய்ப்பு இல்லை.

இரவு 7 மணிக்கு நாங்கள் எங்கள் ரெயில் பெட்டியில் சேர்ந்தோம். மறுநாள் காலையில் வண்டி ஜெய்பூரில் தங்கியது. நாங்கள் அங்கிருந்து புறப்படுவதற்கு 3 மணிக்குமேல் அவகாசம் இருந்ததால், எங்களுள் சிலர் மறுபடியும் ஜெய்பூர் நகரில் சென்று, அதன் எழிலைக் கண்ணால் பருகிக் களித்துத் திரும்பினோம். குறிப்பிட்ட காலத்தில் வண்டி புறப்பட்டது. எங்களது உள்ளம், விக்ரமார்க்க மன்னன் ஆண்ட உஜ்ஜயினியை நாடியது.

இத்தகைய வால்மீகி மகர்ஷியின் செய்யுளமுதத்திலிருந்தே ரகுவம்சம் என்ற பெயரை என் காவ்யத்திற்கு அமைத்து கொண்டேன். ராம கதையைச் சுருக்கிக் கூறினேன். வால்மீகியின் கங்கைபோன்ற தூய்மையும் அழகும் நிறைந்த சொற்களால் அது கூறப்பட்ட பிறகு வேறு எவரால் அதைக் கூறமுடியும்? வயிர ஊசியால் இரத்தினத்தில் துளைவிட்டால் ஒரு நூல்கூட அந்தத் துளையில் சுலபமாகச் செல்லக்கூடும் அல்லவா? இராமருக்கு முன்னும் பின்னும் இருந்த அரசர்களுடைய வரலாற்றை விரிவாகக் கூற என் முயற்சி. அந்த சூர்ய வம்சம் எங்கே? நான் எங்கே? கடலைச் சிறு படகால் தாண்டமுடியுமா? குள்ளன் நெட்டையானவனல் எட்டக்கூடிய கனியை எடுக்க விரும்பினல் யாவரும் நகைப்பார்கள். ஆனலும் சொல்லும் பொருளும்போல் ஒரே தத்துவமாக விளங்கும் பார்வதி பரமேச்வரர்களுடைய அருளினல் ரகுவம்சத்தை இயற்றினேன்.

வாகர்த்தா விவஸம்ப்ருக்தெள வாகர்த்த ப்ரதிபத்தயே |
ஜகத:பிதரௌ வந்தேபார்வதீ பரமேச்வரௌ ||
க்வஸூர்யப்ரபவோ வம்ச: க்வசால்ப விஷயாமதி: |
திதீர்ஷுர் துஸ்தரம் மோஹாதுடுபேன ஸ்மிஸாகரம் ||
மந்த: கவியச: ப்ரார்த்தீ கமிஷ்யாம்ய ஹாஸ்யதாம் |
ப்ராம்சுலபயே பலேலோபாதுத்பாஹுரிவ வாமன: ||
அதவாக்ருத வாக்த்வாவே வம்சேஸ்மின் பூர்வஸூரிபி: |
மணௌ வஜ்ரஸமுத்கீர்ணே ஸூத்ரஸ்யே வாஸ்திமே கதி: ||

சூர்யவம்ச மன்னர்கள்

சூர்யவம்ச மன்னர்கள் பிறப்பிலேயே தூய்மைவாய்ந்தவர்கள். முயற்சியின் பயனை அடையும்வரையில் முயற்சியிலேயே கருத்துள்ளவர்கள். கடலை ஆடையாகக்கொண்ட உலகை ஒருகுடையின்கீழ் ஆண்டவர்கள். தேரை வான வீதியில் செலுத்திச் சுவர்க்கம் சென்று திரும்பி வரும் திறமையுள்ளவர்கள்; வேள்விகளைச் சரியாகச்செய்தவர்கள்; ஒப்புயர்வில்லாத கொடையாளிகள்; செங்கோல் மன்னர்கள்; நெறிதவருமல் முறைப்படி ஏற்பட்ட தூக்கமும் விழிப்புமுள்ளவர்கள். அவர்களுடைய கருவூலத்திலுள்ள பணத்தை எல்லாம் ஏழைகளுக்கே அளிக்கப்பட்டவர்கள்; சத்தியம் தவருமல் இருப்பதற்காகச் சுருக்கமாகவும் அடக்கமாகவும் பேசப்பட்டவர்கள். அவர்கள் வெற்றியை விரும்பியது தூய்மையான புகழையடையவேயொழிய போகத்திற்காகவல்ல. அவர்கள் திருமணஞ்செய்து கொண்டது மக்களைப்பெற்று பிறவிக்கடமைகளைச் செய்வதற்கே அவர்கள் இளமையில் நூல்களைப்பயின்று யௌவ

னத்தில் போகங்களையனுபவித்து முடிவில் யோகத்தால் உயிர் துறந்து வீட்டையடைந்தவர்கள்.

ஸோஹமாஜன்ம சுத்தாஞ மாபலோதய கர்மணும் |
ஆஸமுத்ர க்ஷிதீசாஞமாஞக ரதவர்த்மனும் ||
யதாவிதி ஹு தாக்னீனும் யதாகாமார்சி தார்த்திநம் |
யதாபராத தண்டானும் யதாகால்ப்ரபோதினும் ||
த்யாகாய ஸம்ப்ருதார்த்தாஞய் ஸத்யாய மிதபாஷிணும் |
யசஸே விஜிகீஷுணும் ப்ரஜாயை க்ருஹமேதினும் ||
சைசவேப்யஸ்த வித்யானும் யௌவனே விஷயைஷிணும் |
வார்த்தகே முனிவிருத்தீனும் யோகேனுந்தேதனுத்யஜாம் ||
ரகுணமன்வயம் வக்ஷ்யே |

திலீபமகாராஜன் சரித்திரம்

மனுவம்சத்திற் பிறந்த திலீபன் விரிந்த மார்பும் நீண்ட கையும் திரண்ட தோளும் உள்ள மகாபுருஷன். அவன் அரசியலே உருவெடுத்து வந்தவன்போல் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் சக்தியாலும் ஒளியாலும் மேருமலைபோல் விளங்கினன். உருவத்திற்குத் தகுந்த அறிவும், அறிவுக்குத் தகுந்த ஆராய்ச்சியும், ஆராய்ச்சிக்குத் தகுந்த முயற்சியும், முயற்சிக்குத் தகுந்த தேர்ச்சியுமுடையவன். அவனுடைய அரசாக்ஷியின் காலத்தில் மனுநீதி தவறுதபடித் தர்மத்தைப் பாதுகாத்தான். கதிரவன் நீரிலிருந்து நீராவியை எடுத்து அதையேத் தூய்மைவாய்ந்த நீராக உசிதம் சமயமறிந்து ஆயிரம்மடங்காக அளிப்பதுபோல், அவன் குடிகளிடமிருந்து வசூலித்த வரியை அவர்களுடைய நன்மைக்காகவே செலவிட்டு வந்தான். அவனுக்குப் பெரிய படை இருந்தாலும் அவனுடைய அறிவும் வில்லுமே உலகத்தைக் காத்தன. அவன் பேராசையை ஒழித்துத் தர்மமூர்த்தியாக விளங்கினன். கல்வியளிப்பதாலும், பாதுகாத்தலாலும், அவன் குடிகள் எல்லோருக்கும் தந்தையாக விளங்கினன். (தொடரும்)

மனைவி.—அப்ளிகேஷன் போட்டு இருந்தயனே அதுக்கு ஏதாவநு கடதாசி வந்ததா?

கணவன்:—வராதுபின்னை. அதிர்ஷ்டம் தான் அலைமோதரதே. உன் அருமை பெண்ணும், மாப்பிள்ளையும் குடும்ப சகிதம் ஒருமாஸ டேரா போட வர போராளாம். அதுதான் கடிதாசி இருந்தா.

ஹிந்து சட்ட மாறுதல்கள்

ஸ்ரீமான். P. M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், B.A., M.L.
(Retd. Dist. Judge.)

ஒரு ஸ்திரீ இறப்பதற்கு முன் நல்ல ஞாபகத்துடனிருக்கும் போது தன் சொத்து விஷயமாய் தனக்கு பிறகு யார் அடைய வேண்டுமென்பதை பற்றி உயில் எழுதி வைக்க அதிகாரமுண்டு. அப்படி உயில் எழுதாமல் இறந்தாளாகில் அவள் சொத்திற்கு வார்சுகள் கீழ்வரும் 5 வகுப்புகளிலுள்ளவர்கள். மேல் வகுப்பிலுள்ளாராரும்யில்லாவிடில், அதன் அடுத்த கீழ் வகுப்பினர் வார்சுகளாவார்கள். அப்படியே வரிசை கிரமமாக வார்சுமுறை செல்லும். ஒரு வகுப்பில் உள்ளவர்கள் எல்லோரும் சமபாகங்களாக சொத்தை பிரித்து கொள்ளவேண்டும்.

1 முதலில், இறந்தவளுடைய பிள்ளைகளும், பெண்களும்; பர்தாவும்; (அவளுக்கு முன்பே இறந்த அவள் பிள்ளை பெண்களின் பிள்ளை பெண்களும் இந்த வகுப்பில் சேர்வார்கள்.)

2 இரண்டாவதாக, இறந்தவளின் பர்தாவின் வார்சுகள்.

3 மூன்ருவதாக, இறந்தவளுடைய தாயும்தந்தையும்.

4 நான்காவதாக, இறந்தவளுடைய தந்தையின் வார்சுகள்.

5 இறுதியில், இறந்தவளுடைய தாயின் வார்சுகள் இறந்தவளின் பேரன், பேத்திமார் அவர்களுடைய தாய் அல்லது தந்தை உயிருடனிருந்தால் எவ்வளவு பங்குக்கு உரியவர்களாவர்களோ, அப்பங்கைதான் எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு ஸ்திரீக்கு தன் தாய் தந்தைகளிடமிருந்து வார்சு கிரமத்தில் தான் அடைந்த சொத்து, தனக்கு பிள்ளை பெண்கள் பேரன் பேத்திகள் இல்லாவிடில், மேற் ஐந்து வகுப்புகளில் கூறிய மற்ற நபர்களுக்கு போகாமல் தன் தகப்பனுடைய வார்சுகளுக்கு செல்லும். இப்படியே இறந்த ஸ்திரிக்கு புருஷன் அல்லது மாமனர் சொத்து தனக்கு வார்சு கிரமத்தில் வந்திருந்து—அவளுக்குபுருஷன் பிள்ளை, பெண், பேரன், பேத்தி இல்லாமலிருந்தால், அதை அவள் புருஷனின் வார்சுகள் அடைவார்கள்.

புதிய சட்டத்தின் (Act No. 30 of 1956) படி, பிள்ளை, பெண், பத்னி தாயார், தகப்பன் முதலியவர்களுடைய

நிலைமையை பிரஜைகள் எல்லோரும் நன்கு அறிய வேண்டும்.

பிள்ளை. முதலில் ஒரு புருஷனுடைய சொத்துக்கு பிள்ளைதான் ஏகதேசவார்சாகயிருந்தான். 1937வது வருஷத்திய சட்டம் இறந்த புருஷனுடைய அவிபக்த பங்கு சொத்தை தன் பத்னிக்கு அவள் ஜீவதசை பர்யந்தம் அனுப்பவிக்கும் உரிமையும், அவளுக்கு பிறகு பிள்ளைக்கும் கொடுத்தது. 1956-வது வருஷத்திய சட்டத்தின்படி, ஒரு புருஷனுடைய சொத்து தன் பிள்ளை, பெண், பார்யை, தாயார், இவர்களில் புருஷனிருக்கும்போது யாரிருப்பார்களோ, அவர்கள் சர்வசுதந்திரபாத்யங்களுடன்சொத்தை சமபாகங்களுடன் அடைவார்கள். பிள்ளைக்குக் கிடைக்கும் பாகம், அவனுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் பொதுசொத்தாகும். மற்றவர்கள் தங்கள் தங்கள் பாகங்களை யதேச்சா விநியோக பாத்தியத்துடன் எடுத்துக்கொள்வார்கள். இறந்த புருஷனுடைய சொத்து தன்னுடன் அவிபக்தமாயிருக்கும் பிள்ளைகளேயல்லாமல் அதற்கு முந்தி அவனிடமிருந்து பிரிந்துபோன பிள்ளைகளும் எடுத்துக்கொள்வார்வார்கள். இறந்தவன் ஒரு பிள்ளையை தத்துசெய்து கொண்டிருந்து, அதன் பிறகு அவனுக்கு ஔரஸ பிள்ளை பிறந்திருந்தால், அப்பிள்ளைகளெல்லாரும் சமபாகங்களாகச் சொத்தை அடைவார்கள்.

பெண். 1956 வருஷத்திய சட்டத்திற்கு முன், பெண் தன் தகப்பன் ஆஸ்தியில் உரிமையற்றவளாகயிருந்தாள். பிள்ளை, பிள்ளையின் பிள்ளை, பிள்ளையின் பேரன், தாய், இவர்கள் யாரும்யில்லாமலிருந்தால் தான் பெண்ணுக்கு வார்சுமுறை யிருந்தது. அப்பொழுது பெண்கள் பலரில் விவாகமாகாது இருந்தவர்களுக்குதான் வார்சுமுறை யிருந்தது. அப்பெண்கள் தங்கள் ஜீவிதகாலம்வரை அனுபவிக்கும் பாத்யம்தான் உள்ளது. 1956 வருஷத்திய சட்டத்தின்படி, பெண்கள், பிள்ளைகள் பார்யை, தாயார் இவர்களுடன் சமமாக சொத்தை அடைவதுடன் சொத்து அவர்களுக்கு பூர்ணபாத்யங்களுடன், அதாவது, தாநாதி விக்கிரய உரிமைகளுடன், வருகிறது. இச் சட்டத்திற்கு முந்தியே பெண்ணுக்கு வார்சுமுறையில்தகப்பன் சொத்து கிடைத்திருந்தால், இந்த சட்டத்தின்படி இந்த சட்டம் அமலுக்கு வரும்போது அவள் சொத்தை அனுபவித்துக் கொண்டிருப்பாளாகில், அவளுக்கதில் சம்பூர்ணமான பாத்யமுண்டாகும்.

183212

குறிப்பு. இறந்தவன் சொத்தென்றால், அவனுடைய ஸ்வார்ஜித சொத்தும். அவன் அவிபக்த குடும்பசொத்தில் அவனுக்குள்ள பங்கும், 2. ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகளிருந்தால், அவர்களின் அவிபக்த குடும்ப சொத்தில் அவளுக்கு 1/3 ஒருபாகம் தான் உண்டு. அந்த ஒருபாகமும், அவன் குடும்பசொத்தில்லாமல் சொந்த சொத்தும், மேற்கண்ட விதம் வார்சுகளுக்குபோகும். பிள்ளைகளின் இரண்டு பாகங்கள் அவர்களுக்கே உரிமைபட்டது.

பத்னி. பெண்ணைப்போல பத்னியும் ஸர்வஹக்குடன் புருஷன் சொத்தை மற்றவர்களுடன் சமமாக அடைவாள். பார்யையானவள் தன் புருஷனிறக்கும்போது பதிதையாக (அதாவது பாதிவிரத்யத்திலிருந்து நழுவி பர புருஷனுடனிருந்தால்) அவளுக்கு முன் ஹிந்துலாப்படி, புருஷனுஸ்தியில் பாத்யமில்லாமலிருந்தது. ஆனால் இந்த புது சட்டத்தின்படி அவளெப்படியிருந்தாலும், அவளுக்கு ஆஸ்தியில் பங்குகிடைக்கும்.

தாய். முந்தியலாப்படி தாயிக்கு ஜீவநாம்சபாத்யதை தான் இருந்தது. பார்யை, பிள்ளை, பெண் தௌகித்திரன் இவர்களுக்கு பிறகுதான் அவள் வார்சாகயிருந்தாள். புதிய சட்டம் அவளுக்கு பிள்ளை, பெண், பத்னியுடன் சமானஹக்கு கொடுத்தது. முந்திய லாப்படி தாயிக்கு பிறகு தான் தகப்பன் வார்சாவான். புதிய சட்டத்தின்படியும் அப்படியே. "மாத்ருதேவோபவ" என்று சொல்லி பிறகு "பித்ருதேவோபவ" என்று சொல்லிய உப நிஷத்வாக்யம் இவ்விஷயத்தில் ஆதரிக்கப்பட்டிருக்கிறது.

1956 வருஷம் வரையில் நமது இந்தியா தேசத்தில் பலதிக்குகளில் பலரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட தர்ம சாஸ்திரங்கள் அனுசரிக்கப்பட்டு, வார்சத்வ விஷயத்தில் பல இடங்களில் பலவிதமான வழக்கங்கள் பாராட்டப்பட்டு வந்தன. இந்த 1956 வருஷத்திய 30 நெ சட்டம், இந்தியாவில் எல்லோருக்கும் சொத்து வார்சத்வ, தாயாபாக விஷயத்தில் ஒரே வழி ஏற்படித்தினது மிகவும் போற்ற தக்கது.

ஒருவனுக்கு வார்சு ஒருவருமில்லாமலிருந்தால், முந்திய லாப்படி, அவன் ஆசார்யனுக்கோ (குரு) அல்லது அவன் சிஷ்யனுக்கோ, அல்லது அவன் சஹபாடிக்கோ அவன் சொத்துபோகும். 1956 வருஷத்திய சட்டத்தின் மேற்சொன்னவர்களுக்கு ஒருவிதமான பாத்யமும் கிடையாது; கவர்ன்மெண்டார் வார்சுகளாவார்கள்.

—)●(—

அத்தியாயம்—16.

மங்கல்ய பிச்சையும்—மன உறுதியும்

வீட்டில் நுழையும்போது பார்வதி ஏதோ ஒரு உறையிட்ட கடிதத்தை மேலும் கீழுமாகத் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் அக்கடிதம் 'டப்' என்று சப்தத்துடன் மேஜை மீது மோதி விழுந்தது.

இதையெல்லாம் கவனித்தவாறு வந்த சதாசிவம் "பார்வதி! கடிதம் யாருக்கு? யாரிடமிருந்து வந்திருக்கிறது? எந்த ஊர்?" என்று கேள்விகளை அடுக்கினார்.

"அது யாரோ! எந்த ஊரோ?" என்று உப்புசப்பில்லாமல் பதில்சொன்னாள் பார்வதி. உறையைக் கிழித்து கடிதம் கண்டவர் ப்ரமித்துவிட்டார். திடுக்கிடும்படிச் செய்த கடிதத்தின் வாசகம் என்ன?

அன்பரே! வணக்கம்!

ஏய் கிழமே! நீ உறக்கத்திலும்கூட என்ன யோசனை செய்து கொண்டிருக்கிறாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் ப்ரசங்கம் செய்த இடத்தில் நீ உன் அழகான காரோடு பூதம் போல் அமர்ந்திருந்தது என் கண்களின் பார்வையினின்று தப்பிவிட்டதாக நீ நினைத்து இறுமாந்து கொண்டிருப்பாய். அதுதான் நடக்காது. நீ வந்திருப்பதை அறிந்துதான், உன் மனதில் உறுத்த தான், கிழங்களைப்பற்றி நான் அருமையாகப்பேசினேன். நீ என் பின்னோடு ஆளை அனுப்பியதையும் கவனித்தேன். அவனை அங்கேயே கழுத்தை முறித்து போட்டிருப்பேன். பாவம்! பணக்கார

கட்டைகளின் கொட்டத்தை அடக்காமல் அவனை—முன்பின் அறியாதவனை—ஏன் அடிப்பது என்று தான் விட்டேன்.

இடத்தை தெரிந்து கொண்டதும் தங்கள் பரிவாரங்கள் பின் தொடரும் என்பது யோசிக்காமல் எதிர்பார்க்கத்தக்கதே. அப்படி வந்தால் என்ன நடக்கும் என்பதை என்னுலே ஊகிக்க முடியாது. உன் ஆட்டத்தை எல்லாம் உன் வீட்டோடு நிறுத்திக்கொள். என் நண்பர்களின் எண்ணிக்கை ஹ—ம்.... உனக்கென்ன தெரியும் அவர்களெல்லாம் பூ....பூ....என்று உன்னை ஊதிக்கொண்டே போனல் நேராக ஆற்றங் கரையிலோ,....சமுத்திரத்திலோ போய் விழுவாய். மரியாதையாக என் விஷயத்தில் தலையிடாமல் இருந்தால் தப்பித்தாய். இல்லையேல்......ஜாக்கிரதை.... உன்னுடைய தொந்தி கரைந்தால் தான் உன் கொழுப்பு குறையும். அதைக் கரைக்க வழிசெய். உன்னல் முடியாவிடில் நான் சரியான படி செய்து விடுவேன்.

உன் ஆடல்களுக்கு என் குடும்பம் ஆடும்—ஆடுகிறது—ஆட்டுவிப்பாய். ஆனல்.... இந்த சிங்கத்தினிடம் நெருங்கமுடியாது. ஆபத்து...நெருங்காதே....என்றும் கூறுகிறேன்.

மிஸ்டர் ரகு''

சதாசிவம் கடிதத்தை அஜாக்கிரதையாகக் கீழே போடாமல், பத்திரப் படுத்திக் கொண்டு நகர ஆரம்பித்தார். இவர் படிக்கத் தொடங்கியது முதல் இவர் முகத்தில் தோன்றி, மறைந்து கொண்டிருந்த குறிகளையும், சாயல்களையும் கவனித்து வந்த பார்வதி, அவர் நகர முற்படுவதைக் கண்டதும் பரபரப்புடன்...“என்ன? கடிதத்தை படித்துவிட்டு பேசாமல் போகிறீர்கள். விஷயத்தைச் சொல்லுங்கள்” என்று தடுத்து நிறுத்தினள்.

“அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்த பையன் ஏதோ கிறுக்கியிருக்கிறன். அவன் மிரட்டுதலுக்கு யார் பயப்படுகிறர்கள். நீ சஞ்சலப்படாதே பார்வதி!” என்று மழுப்பினர்.

“யார்....ரகுவா.... எனக்குத் தெரியும்... அப்போதே... இந்தத் தள்ளாத வயதில் இரவும் பகலுமாக எங்கோ சுற்றுகிறீர்கள். வழிதேடுகிறீர்கள். நம்மாலெல்லாம் அவ்வளவு சீக்கிரம் மசியவைக்க முடியுமா அந்த பையனை?”

"கடைசி தடவை பார்வதி! நேரிலேபோய் அவனைத் திருத்த ஏதாவது ஒரு வழி செய்கிறேன். பிறகு நம்மேல் பழியில்லை"

''என்ன நீங்களா நேரில் போகப்போகிறீர்கள்? கூடவேக்கூடாது. உங்களை வெளியில் அனுப்பித்துவிட்டு வரும் வரையில் யாரால் கவலைப்பட முடிகிறது. இந்த வயதில் நிம்மதிக்கு பதில் எனக்குக் கவலைதான் அதிகமாகிறது. நான் எத்தனை தடவை கூறுவதையே கூறுவது, பைத்தியம்போல். பேசாமல் ரஞ்சன் பங்கை எடுத்து ஏதாவது ஒரு 'பாங்கில்' போட்டுவிட்டு அவர்கள் பணத்தைத் தொலைத்து விடுங்கள்."

"பார்வதி! தொலைத்து விடுவதென்பது கஷ்டமான காரியமேயன்று. அதற்கெதற்கு இத்தனை கஷ்டப்பட வேண்டும்? இந்த கடைசி தடவை மட்டும் போய்தான் ஆக வேண்டும். இதோபார் லக்ஷ்மியிடம் வாங்கி வந்த கடிதம் அவளிடம் ரகுவை எப்படியும் வீடு கொண்டு சேர்த்து விடுவதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். அதன்படி சேர்த்து விட்டால் பிறகு உன் சொல்படியே எங்கும் போகாது இருக்கிறேன்."

"உம்...நீங்கள் எப்படியாவது அங்கு போகாமலே காரியத்தை முடிக்கப்பாருங்கள். நான் ஏதாவது கூறினால் 'கடவுள் இருக்கிறார்' என்று சொல்கிறீர்கள். அந்த வேதாந்தம் எனக்கும் தெரிந்ததுதான். என்றால் ஒன்றும் முடியவில்லை''

''பார்வதி! உன் மனது நோகாதபடிதான் எல்லாம் செய்கிறேன். இந்த ஒரு விஷயத்தில் மட்டும்தான் அவர்களுடன் பழகிய தோஷத்தால் நான் கடமை பட்டிருக்கிறேன்."

"இவ்வளவு தூரம் பேசுகிறீர்களே. அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறது என்பதைக் கூறவே இல்லையே"

"எதற்கு பார்வதி....உன்னை அப்படி செய்வேன்... இப்படி ஆட்டுவேன் ஜாக்கிரதை என்று ஏதோ...அதைப் பற்றிய எண்ணத்தைவிட்டு மனதைத் திருப்பு" என்று உபதேசித்துவிட்டு அகன்றார்.

சதாசிவத்திற்கு ரகுவின் கடிதம் திடுக்கிடவே செய்தது. பேச்சோடு இருந்தது எழுத்திற்கு வந்துவிட்டதே.

லக்ஷ்மியிடம் பெற்று வந்த கடிதத்தை யார் மூலம் எப்படி சேர்ப்பிக்கலாம் என்றே சிந்தித்து வந்தார். அவருக்கு நிம்மதியை அளிக்காது மாறிமாறி கவலைகளே இருந்து வருவதை நினைத்து வருந்தினார்.

பகலவனும் தன் கடமையைச் செய்து நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறான், கடிகாரமும் முட்களை நகர்த்தி மணியை ஏற்றிக் கொண்டே போகிறது. ஆனால் மனிதன் தன் கடமைகளை மேற்கூறியவைகளைப்போல் சரியாகத் தவறாது செய்கிறானா? அதுதான் இல்லை.

எத்தனை விவேகி யானாலும், தன் வேலைகளை சரிவர வகுத்துக்கொண்டு செய்யும் சதாசிவம்கூட தன்னை மறந்து நிலை பெயராது நேரம் இரவை எட்டியும் உட்கார்ந்தவர் உட்கார்ந்தவரே. பார்வதி எத்தனை பொறுமையுள்ளவளாயினும், இப்படி கல் போல எத்தனைக் குரலுக்கும் பதில் கொடுக்காது உட்கார்ந்திருப்பவரைப் பார்த்ததும் அவளுக்கு ஆத்திரம் வெடித்தது. தன் பலம் முழுவதையும் போட்டு, அவரை உலுக்கி எழுப்பினாள்.

"எத்தனை நேரம் இப்படி உட்கார்ந்திருக்கப்போகிறீர்கள். ஊண் உறக்கம் ஒன்றும் நினைவில்லையோ, அல்லது தேவைதான் இல்லையோ எழுந்திருங்கள்" என்று சற்று அன்பும் கவலையும் சேர்ந்த கடுமையோடு கேட்டாள்.

"உம்..." என்றாரே தவிர வேறெதுவும் பேசவில்லை சதாசிவம். பொம்மைபோல் பார்வதியை பின் தொடர்ந்தார். அவள் என்ன பரிமாறினாளோ? எப்படியிருந்ததோ? அதையெல்லாம் கவனித்தாரா! இயந்திரம் தன் முறைப்படி எப்படி வேலைசெய்கிறதோ, அப்படியே எதையோ அள்ளி அடைத்துக் கொண்டு விழுந்தார் படுக்கையில்.

இப்படியும் அப்படியுமாக மனத்தை உருட்டும் சிந்தனை, மனதோடு உடலையும் புரட்டிபுரட்டி நித்திராதேவியை அணுகவிடாது காவல் புரிந்தது. அவளும் இதன் விரட்டலுக்கு பயந்துதானோ அவரிடம் அடைக்கலமடைய மறுத்தாள். தினத்தைவிட இன்று என்ன மாறுதல் என்றால், சதாசிவம் ஒருவரே அவ்வறை முழுவதற்கும் இருப்பார். அது இரவானாலும் சரி. காலையாகினும் சரி. ஆனால் இன்று வாயிற்படி யருகிலே பார்வதி குறுக்கப் படுத்திருந்தாள்.

தற்செயலாகக் கடிகாரத்தைப் பார்த்தவர் 'அட! மணி இவ்வளவாகி விட்டதா. சரி இந்த அகால வேளையில், இருட்டில் நாம் எங்கும் போகக்கூடாது. பார்வதி பயப்படுவதுபோல், அந்த பயல் எழுதியிருக்கும்படி, இப்போது போனால் கை, கால்களை முறித்தோ அல்லது கொன்றே போட்டுவிடுவான். காலையில் தான்....காலையில் என்ன செய்வது?' இப்படி குழம்பிக் காந்தினர். 'நாம் போகாவிட்டால் என்ன?...அன்றுபோல் முகமூடியுடன் இங்கே வந்துவிட்டால்....வந்தாலும் அறை வாயிலிலிருக்கும் பார்வதிக்கு ஏதாவது....' அதற்குமேல் எண்ண முடியாமல் அவ்வெண்ணமும் வாட்டியது.

இதிலிருந்து மரணத்திற்கு பயந்து நடுங்கும் கோழை என அவரை நினைக்கக் கூடாது. ஐந்து நிமிஷத்திற்கு ஒரு முறை' என்ன தூங்கிவிட்டீர்களா' என்றும், 'இன்னும் தூங்கவில்லை?' என்றும் படப்படப்பை உள்ளுக்குள் அடக்கிக்கொண்டு கேட்கும் பார்வதியின் வாஞ்சையான வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுத்துதான். இவரது மாறுதலைக் கவனித்து, அவர் வெளியே போகமுடியாதவாறு அறைவாயிலில் படுத்ததைக் கவனித்ததும் சதாசிவத்திற்கு உண்மையில் கட்டுமீறிய துக்கம்தான் பொங்கியது. அவர் நயனங்கள் கண்ணீரைச் சிந்தின. 'பாவம்! இத்தனை வயதாகியும் என்னிடம் எவ்வளவு பக்தி, ப்ரியம். என் உயிருக்குப் பூட்டுப் போடுவதுபோல் படுத்துவிட்டாளே. இவள் செய்கை மூலம் பாரத நாட்டுப் பெண்மணிகளின் சிறந்த பண்பையல்லவா கண்ணாடிபோல் நமக்கு விளக்கிவிட்டாள். எனக்கு இச் சிறந்த பத்தினி கிடைக்க ஆயிரம்குடம் அபிஷேகம் செய்திருப்பேன். இல்லாவிடில் கிட்டுமா? ஹூம்... இவள் கேட்பதுபோல் இந்தத் தள்ளாத வயதில் மனதிற்கு நிம்மதியைக் கொடுக்காமல் வீண் உளைச்சலைக் கொடுத்து வருத்திவிட்டேன். அவள் குணத்திற்கு ஒரு குறையும் வரக்கூடாது. எனக்காக இல்லாவிடினும், அவளுக்காக வேனும், நான் உயிர் வாழவேண்டும். இனி ஜாக்கிரதையாக, தூரவிருந்தே காரியத்தை முடிக்கப்பார்க்கிறேன்' என்று தீர்மானம் செய்து கொண்டார்.

இவர் தூக்கமில்லாது அடிக்கடி புரளுவதால் கட்டிலின் 'க்ரீச்' சப்தத்தைத் தவிர வேறென்றும் அவ்வீட்டிலேயே கிடையாது. கடைசியில் சதாசிவத்தை விடியற்காலை நாலைந்து மணிக்குதான் நித்திராதேவி ஆட்கொண்டாள்.

பார்வதி மட்டும் தூங்கவே இல்லை. தினத்தைவிட சில நிமிடங்கள் முன்பாகவே எழுந்தாள். தூங்கும்போது ரகுவிடமிருந்து வந்த கடிதத்தை சதாசிவம் தன் சட்டைப்பையில் வைத்ததைக் கவனித்திருந்து, அதை அவர் தூங்குவதால் எடுத்து வந்துவிட்டாள். தன் அறைக்கு வந்துவிட்டாலும் என்றும் செய்யாத காரியத்தை செய்துவிட்டதால் நெஞ்சு படபடக்க கரங்கள் நடுங்க வாசித்து முடித்தாள்.

அதிலிருந்த வாசகங்கள் பூதமாக எழுந்து தலை விரித்தாடியது. தலை கிறுகிறுத்தது. கெட்டியாகப் பிடித்தவாறு நாற்காலியில் அமர்ந்தாள். நேரமோ விஷம் ஏறுவதுபோல் ஏறிக்கொண்டே போயிற்று. சட்டென ஒரு யோசனை குறுக்கிட்டு அவளை மண்டையிலடித்து எழுப்பியது. வேலைக்காரர்களிடம் போய் "நான் வெளியே போகிறேன். ஐயா என்னை எங்கே என்று கேட்டால் கடைக்குப் போயிருப்பதாகச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு கிடுகிடென்று நடந்தாள். அவள் காய்கறி கடைக்கு சில நாட்கள் செல்லும் பழக்கம் இப்போது உதவி புரிந்தது.

'ஆனந்த பவன்'த்தில் கதவு திறந்தேயிருந்தது. லக்ஷ்மியும் முன்புறமே இருந்ததால் நேரே போய் அமர்ந்தாள். வேகமாக நடந்து வந்ததாலும், உள்ளூர நடுக்கும் பயத்தாலும் நெடுமூச்சு முட்டியது. இவ்வளவு காலையில் வந்ததோடு அவள் முகத்தைப் பார்த்ததும் லக்ஷ்மிக்கு சப்த நாடியும் ஒடுங்கி அந்தகாரம் கவ்வியது.

"என்னம்மா....இவ்....இவ்வளவு காலையில்" என்ற தடுமாறிய வார்த்தைகள் நேரம் கழித்தே எழும்பின.

"காரியமாகத்தான் லக்ஷ்மி" என்றவள், சுற்றி வளைக்காமல் நேரே விஷயத்திற்கு வந்தாள். "லக்ஷ்மீ! நான் உன்னை விட பெரியவளாயினும் இப்போது உன்னிடமே ஒன்று யாசிக்க, பிச்சைக்கேட்க வந்திருக்கிறேன்" என்று கூறியவளின் நேத்திரங்களில் நீர்த் துளிகள் பட்பட்டென வெடித்து உருண்டன. கேவலும் பின் தொடர்ந்தது.

லக்ஷ்மிக்கு ஏற்கனவே இருந்த குழப்பம், கவலை, எல்லாவற்றோடு, இவ்வார்த்தையும் சேர்ந்ததால், குடியே முழுகி விட்டது போல ஒரு பீதி சூழ்ந்தது. 'ஒரு வேளை ரகு வீட்டிற்குள் புகுந்து சதாசிவத்தை ஏதாவது செய்து

விட்டானே....ராமா......இதென்ன சோதனை?'' என்றேங்கினாள். பதிலே பேசாது அவள் முகத்தையே பரிதாபமாகப் பார்த்தாள்.

"லக்ஷ்மி! உன் கலக்கம் எனக்குத் தெரியும். என்ன செய்வது அம்மா! இதோ பார், இதைப் படி. பிறகு எல்லாம் கூறுகிறேன். இக்கடிதத்தைப் படித்து கிழித்துப் போட்டு விடக்கூடாது. பத்திரமாக என்னிடம் கொடுத்து விடு. இதை நான் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாகக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறி ரகுவின் கடிதத்தைக் கொடுத்தாள்.

லக்ஷ்மியின் நிலையை என்னென்று கூறுவது பாவம்? அக்கடிதத்தின் ஒவ்வொரு எழுத்தும் அவள் நெஞ்சைத் துண்டு துண்டாக நறுக்கித் தள்ளியது. துயரம் நெஞ்சைக் கவ்வ "நான்....என்னம்மா செய்வது....எப்படி எழுதியிருக்கிறான் பாவி. என் மகனானால் என்ன. அவன் இப்போது அகப்பட்டால், அவன் எழுதியிருப்பதுபோல் அவன் கழுத்தையே முறித்துப் போட்டு விடுவேன்" என்றாள்.

"ஆத்திரத்தை கைவிடும்மா! நான் மறுபடியும் கேட்கிறேன், உன்னிடம் மாங்கல்ய பிச்சைக் கேட்கதான் வந்தேன். தயவு செய்து அளியுங்கள், வாழ்நாளுக்கும் கடமைப்பட்டவளாவேன்" என்று ஏதேதோ கூறினாள் பதி பக்தியின் ஆவேசத்தால்.

தான் சூடுபட்டிருப்பதால் லக்ஷ்மியை இவ்வார்த்தைகள் அதிகமாக பாதித்து துயரத்தில் அழுத்தியது. "அம்மா! அதிகமாக நீங்கள் பேசி மனக்கஷ்டமடைய வேண்டாம். என்ன செய்ய வேண்டுமோ கேளுங்கள். நான் கட்டாயம் செய்கிறேன்'' என்று தன்னை சுதாரித்தவாறு பேசினாள்.

"அக்கடிதம் வந்தது முதல் சித்த ப்ரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருக்கிறார். இரவு முழுவதும் உறங்கவே இல்லை. இப்போதுதான் ஐந்து மணிக்குக் கண்ணயர்ந்தார். இக்கடிதத்தில் என்னென்ன எழுதியிருக்கிறான் பார். அவர் நேரே போய் புத்தி சொல்கிறேன் என்று குதிக்கிறார். நேரே அனுப்ப என் மனம் துணியவில்லை. இந்தக் கடைசி காலத்தில் உங்கள் குடும்பம் அல்லல் படுவது போல், ஏதாவது எங்களுக்கும் வாராதவாறு காக்க உன்னால்தான் முடியும். நீ உடனே அவரை வரவழைத்து

இனி நீங்கள் எங்கும் போய் அவனைச் சந்திக்க வேண்டாம். அந்த முயற்சியை விட்டுவிடுங்கள் என்று கூறிவிடும்மா."

"ஆகட்டும்......அப்படியே செய்கிறேன், நீங்களே அவரை வரச்சொல்லி விடுங்கள்"–என்று மேலுக்கு நாசூக்காகக் கூறிவிட்டாளே தவிர, 'ஐயோ! நாம் அசட்டுத்தனமாகக் கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பி விட்டோமோ? அதை எப்படிப் பெறுவது? அவரை எப்படித் தடுப்பது? அவ்வளவு சுலபத்தில் கேட்கக்கூடியவரா? என்ற கேள்விகள் சங்கிலி பிணைப்பாய் எழுந்தன;

"இதோ பாரம்மா! நான் யாருக்கும் தெரியாமல் கடைக்குப் போய் வருகிறேன் என்று வந்திருக்கிறேன். நீ வரச் சொன்னதாக நான் சொன்னால் சந்தேகம் மூளும். நான் வந்ததும் அவருக்குத் தெரியவேண்டாம். நீ டெலிபோனில் கூப்பிடு" என்றாள்.

போன் மூலம் விசாரித்ததில் அவர் பூஜையில் அமர்ந்திருக்கிறார் என்ற செய்தியை முரளி தெரிவித்தான். அதுவும் பார்வதிக்கு ஒரு விதத்தில் நல்லதாயிற்று. 'ஓசை செய்யாது கடிதத்தை அவர் சட்டைப் பையில் வைத்து விடலாம். மேஜை மேலிருந்தாலும் கடிதம் காணாதது கண்ணில் பட்டிருக்கும், எழுந்ததும் பூஜைக்குப் போய் விட்டதால் சட்டைப் பக்கம் வந்திருக்க மாட்டார்! தப்பித்தோம்' என்றும் லக்ஷ்மி ஒப்புக் கொண்டு விட்டதால் உள்ளூர மந்தகாஸம் துள்ள வீட்டிற்குப் போனாள்.

"என்ன சித்தி! நேற்று கிழம் வந்து கூத்தாடியது. இன்று கிழவி வந்து நாடகமாடிவிட்டுப் போகிறது. என்ன சமாசாரம்" என்று அவளுக்கு இயற்கையாயுள்ள அலட்சியத்துடன் கேட்டுச் சிரித்தாள் ரேவதி.

"கிழமும் ஆடும், கிழவியும் குதிக்கும், நானும் பாடுவேன். நீயும் உன் தம்பியும் நாடகமாடி என்னை வதைக்கிறது போதாதா நம் வீடே தான் நாடகமேடையாக இருக்கையில், வேறொருவரைக் கூற உன் நா எழுகிறதே ஆச்சரியந்தான்."

"நானும்...ரகுவும்......உம்.......என்ன நாடகமாடி விட்டோம்?"

"பாசாங்குகாரி. ரகுவோ கொள்ளைக்காரனாகவும், கொலைக்காரனாகவும் மாறிக் கொண்டே போகிறான். நீயோ பிடாரியாய் திரிகிறாய்...."

"ஐயோ...கொலைகாரன்.... நம் ரகுவா...சித்தி!... நம் ரகுவா"?

"எல்லாம் என் வயிற்றில் பிறந்த பாதகன்தான். நம் அப்பாவின் படிப்பென்ன? வாழ்ந்த கௌரவமென்ன? ரஞ்சனை மேல் நாட்டிற்கு அனுப்பியிருக்கும் மதிப்பு என்ன? நம் சுற்றத்தாரின் பதவியும், அந்தஸ்துகளும் என்ன? இப்படியிருக்கையில் நீ கவலையில்லாமல் சிரித்து எகத்தாளமாய் செய்கிறாய். ஒருவனைத் தண்ணீர் தெளித்து விட்டது போல் உன்னையும் விட்டுவிடுவேன் என்று மட்டும் நினைக்காதே. இனி என் உத்திரவின்றி வெளியே அடி எடுத்து வை பார்க்கலாம். என் அனுமதியோடு, நான் அனுப்பும் துணையோடுதான் போக வேண்டும். உன் படிப்பிற்கு இன்றோடு முற்றுபுள்ளி வைத்தாகி விட்டது. வீட்டிலே நல்ல உபாத்தியாயினி வைத்து சங்கீதத்தை விருத்தி செய்."

"..........."

"ஏன் ரேவதி பேசாமல் இருக்கிறாய்? இத்தனை தடவையாய் மறுக்கலாம் இனி என் தீர்மானத்தை மாற்ற முடியாது. அடுத்த வேலை ரஞ்சனை தந்தி யடித்து வரவழைப்பதுதான்....

"என்ன?... ரஞ்சனையா?.......அவனது நோக்கம் என் ஆவது....அவ்வளவு தூரம் சென்றும் பயனில்லாமல் திரும்புவதா? கூடவே கூடாது சித்தி? அப்படி திரும்பி அழைத்தால்தான் நம் கௌரவத்திற்கு குறைவு ஏற்படும்."

"ஒரு குறைவும் இல்லை வீட்டைப் பாதுகாக்க நம் குடும்பத்தில் இவனை விட பெரியவர்கள் யாரும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியுமாதலால் மேலே பேச்செழாது. நமக்கு இருக்கும் சொத்தே தலைக்குமேல் வெள்ளம். இப்போது மட்டும் என்ன ரஞ்சனின் படிப்பு குறைந்ததா? இதை வைத்துக்கொண்டு சந்தோஷமாக இருக்கலாம்."

"சித்தி....ரகுவைப் பற்றி ஏதோ சொன்னாயே. என்னது....எனக்கு ஒரே நடுக்கமாய் இருக்கிறது." என்று உதறலோடு கேட்டாள் ரேவதி. லக்ஷ்மியும் 'அவள் புத்தி இது கூறுவதிலாவது பூரணமாகத் திரும்பி விடுமோ' என்ற நப்பாசையுடன், ரகு முகமூடியோடு, சதாசிவம் வீட்டிற்கு வந்து

செய்த அட்டகாசத்தையும் இவர்கள் வீட்டிற்கு வந்ததையும் எடுத்துக் கூறினாள்.

"அவன் இப்போது எங்கே இருக்கிறான்."

"ரேவதி! என்னை ஒன்றும் துணதுணப்பாதே. போ" என்று சீறினாள்.

ரேவதியின் அடிமனதில் 'ரகு கொள்ளைக்காரன், கொலைக்காரன்....நீயும் பாழாகி விடாதே! சித்தி சொல்வதைக் கேள்" என்று ஏதோ ஒன்று படக் படக்கென்று நாடி அடித்துக்கொள்வது போல் கூறிக்கொண்டே இருந்தது. நாம் சதாசிவத்தை வாய் பேச்சால் மட்டம்தட்டி வந்தோம். இந்த ரகு கையாலேயே தீர்த்துக்கட்ட துணிந்து விட்டானே. ஒருவேளை என்னையும் அவனுடைய கூட்டாளி, உடந்தை என்று சித்தியும் அந்தத் தாத்தாவும் நினைத்து விடுவார்களோ என்ற பயமும் நசுக்கிப் பிழிந்தது.

அங்கு சதாசிவமோ முரளி தெரிவித்த விஷயத்தைக் கேள்வியுற்று திகைத்தார். 'எதற்கு லக்ஷ்மி இவ்வளவு காலையில் நம்மைக் கூப்பிடவேண்டும்? ஒரு வேளை நமக்குக் கடிதம் அனுப்பியதுபோல் ரகு அவளுக்கும் ஏதாவது அனுப்பியிருக்கவேண்டும், அல்லது நேரிலாவது வந்திருக்கவேண்டும். என்ன பயமுறுத்தினனோ?' என்று பல விதமாக அவள் அழைத்ததின் காரணத்தைச் சிந்தித்தார்.

சட்டை மாட்டிக்கொண்டவர் பார்வதியிடம் சென்று, "லக்ஷ்மியிடமிருந்து போன் வந்ததாம். நான் போய் வருகிறேன். எதற்காக இவ்வளவு காலையில் கூப்பிட்டாளோ?" என்று கூறி அகன்றார். ஆனால், மனதில் மட்டும் 'தினம் ஆயிரம் கேள்விகள் கேட்டு மடக்கும் பார்வதி இன்று 'போய் வாருங்கள்' என்ற ஒரு வார்த்தையோடு நிறுத்திக் கொண்டு விட்டாளே. பாவம்! நம்மிடம் கேட்டு கேட்டு அலுத்துப் போயிருக்கும் அதுதான் காரணம் என நினைத்தார்'. ஆனல் இவள் முடுக்கிவிட்ட மிஷின்தான் அங்கு வேலை செய்கிறது என்பதைக் கண்டாரா?

"அடடா! வானத்திலே கிழக்கு வெளுக்கும் முன்பே சதாசிவம் தாத்தா நெற்றியிலே விபூதி வெளுத்துவிட்டதே" என்று அவர் சிந்தனையை அறுத்து வரவேற்றாள் சரோஜா.

"ஆமாம்மா. மனசு வெளுத்து சுத்தமாயிருக்கணும். அதுனலே முகத்திலேயும் அதுக்கு அறிகுறியா வெளுத்து விட்டேன். சரி....அம்மா எங்கே?

"அம்மாவா........தா........எப்பொழுதும் அழுது அழுது கண்ணைத் துடைக்கத்தான் சரியாயிருக்கும் நேரம். இப் போதும் அதே வேலையைதான் செய்து கொண்டிருப் பாள். நீங்கள்"....என்று பேசிக்கொண்டிருந்தவள் 'ஏரோ ப்ளேன் ரஞ்சன் அண்ணு போன ஏரோப்ளேன்' என்று கத்தியவாறு ஆகாயத்தில் பறந்துசெல்லும் விமானத்தைப் பார்த்து குதித்தாள்.

சதாசிவம் சற்றும் எதிர்பாராத விதம் லக்ஷ்மி மண்டி யிட்டு அமர்ந்து "உங்களை நான் ஒரு வரம் கேட்கப் போகி றேன். அதைக் கட்டாயம் கொடுக்கவேண்டும், மறுக்கவே கூடாது" என்றாள்.

ஒன்றும் புரியாத சதாசிவம் "என்னம்மா, விஷயம்? எழுந்திருங்கள்" என்றார்.

"அதெல்லாமில்லை. செய்கிறேன் என்று கூறுங்கள்" என்றாள் மறுபடியும்.

'இதென்னடா தர்மசங்கடம், நாம் ஒன்று கூற அது ஒன்றாக ஏதாவது நடந்துவிட்டால்' என நினைத்து "நான் அம்மாதிரி யெல்லாம் சொல்லமாட்டேன். முதலில் விஷ யத்தைச் சொல்லுங்கள். என்னால் முடிந்தால் செய்கிறேன். முடியாத அதீத காரியமாக இருந்தால் முடியாது" என்றார் கண்டிப்பானக் குரலில்.

"எனக்கு ரகு பிறக்கவில்லை என்றே நான் நினைத்துக் கொள்கிறேன். நீங்கள் இனி அவன் பொருட்டு வெளியி லேயே போகக் கூடாது. உங்களுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் அந்த பாவமும் என்னையல்லவா சேரும்? நான் அன்று எழுதிக் கொடுத்த கடிதத்தை என் எதிரிலேயே கிழித்துப் போடுங்கள்" என்றாள்.

"ஏனம்மா? ரகு வந்து ஏதாவது கலாட்டா செய்தானா? கடிதம் அனுப்பினானா? ஏன் உங்கள் சித்தம் திடீரென மாறிவிட்டது?"

திடீர் மாறுதலுக்குக் காரணம் என்ன தெரிவிப்பது என்ற கேள்வி வேறு கிளம்பியது. படீரென ஒரு யோசனை உதயமாகியது. தாமதமின்றி கூற ஆரம்பித்தாள்.

"ஆமாம்! நேற்று இரவு வந்தான். எப்படி வீட்டிற் குள் புகுந்தான் என்பது மர்மமாய் இருக்கிறது. நேரே என்னிடம் வந்து "அந்தக் கிழத்தின் சகவாசத்தை விடப் போகிறாயா, இல்லையா. மரியாதையாக விட்டு விடு. 'விட்டு விடுகிறேன்' என்று எதிரில் கூறு. இல்லையேல் இங்கேயே

வெட்டிக் குழிதோண்டிப் புதைத்து விடுவேன். நீயாக விடாவிட்டால் நீ நாசமாவதுமன்றி அந்த கிழத்தையே உன்னிடமிருந்து விலகிக் கொள்ளும்படி செய்து அதற்கு முடிவு கட்டி விடுவேன்' என்று பயமுறுத்தினான். என்னால் உங்களுக்கு எதற்குக் கஷ்டம்? நான் ஒருத்தி தவிப்பது போதும். அந்தப் பாவியால் பார்வதியம்மாளின் சுமங்கலித்வத்திற்கு குறை ஏற்படவேக் கூடாது. தயவு செய்து இந்த வரத்தைக் கொடுங்கள். மேலும் ரஞ்சனுக்குத் தந்தி கொடுத்து வரவழைத்து விடுங்கள். பிறகு வீடு சீர்பட்டு விடும்'' என்று மாலை மாலையாகக் கண்ணீர் உகுத்தவாறு வேண்டினாள்.

லக்ஷ்மி கூறுவதையெல்லாம் திகைப்போடு கேட்டுக் கொண்டிருந்த சதாசிவம் 'பெற்ற தாயாரையே கொலை செய்யத் துணிந்தவனுக்கு, நாம் எந்த மூலைக்கு...?' என்று நடுங்கினார். "நிஜமாகவா.......நான் நினைத்தேன் இப்படி ஏதாவது நடந்திருக்குமென்று. இதோ எனக்குக்கூட கடிதம் அனுப்பியுள்ளான்'' என்று ரகுவின் கடிதத்தைக் கொடுத்தார்.

அப்போதுதான் கடிதத்தைக் காண்பது போல் பார்த்துவிட்டு, "எனக்குத் தெரியும். இப்படிக் கடிதம் எழுதியிருக்கிறேன் என்றும் என்னிடம் அவன் சொன்னான்'' என்றாள். சதாசிவத்திடம் ரகு வந்தது நிஜம் என்று கூறிவிட்டாளே தவிர உள்மனம் அவள் பொய் கூறியதை எடுத்து உரைத்தது.

"நேராக உன்னிடம் சொன்னானா....தைரியம் அதிகம் தான்"

"ஹூம்-தைரியத்திற்கு என்ன குறைவு. இப்படிப் பட்ட பையனோடு என்ன செய்வது. ஒன்றும் தெரியாத குழந்தைகள் இருவரைக் கவனிப்பேனா? தூரதேசம் சென்றிருக்கும் ரஞ்சனைப்பற்றி நினைப்பேனா? ரேவதியோடு ஆடுவேனா? ரஞ்சன் திரும்பும்வரை காத்திருந்தால் தலை கீழ் மாறாட்டம் ஏற்பட்டுவிடும். அதுவரை நானே இந்தக் கவலைகளைத் தாங்கிக்கொண்டு இருப்பேனோ? இறப்பேனோ? யார் கண்டது. அதனால்தான் அவனை வரவழைக்க மனது துடிக்கிறது" என்றாள்.

சதாசிவத்தின் நெஞ்சம் உருகியது. கண்ணீரோ மடை திறந்த வெள்ளம்போல் ஓடியது. "அம்மா! அப்படி எல்லாம் பேசக்கூடாது. நீங்கள் தீர யோசனை செய்யவே யில்லை. உங்கள் சுற்றத்தார்களை ஒருமுறை நினைத்துப்

பாருங்கள், ஒவ்வொருவரும் மிராசுதாரும், ஜமீன்தாரும், ஜாகிர்தாருமாக இருக்கிறார்கள். ஏன் உங்கள் கணவர் மட்டும் என்ன? இப்போது இருக்கும் ரஞ்சன் என்ன? ஒவ்வொருவரும் உச்சநிலையில் ஏறி அமர்ந்திருக்கும்போது இந்த பையன் ஒருவனை மட்டும் தத்தாரியாய் விடுவதா? அண்ணன் எப்படி? தகப்பன் எப்படி? ஆனால் இந்தப் பையனோ......என்று பலவாறாக இழித்து உலகம் பேசும். அதற்கு பூட்டு போடவும் முடியாது, அணைகட்டினாலும் நடக்காது. அவன் ஒருவனின் செயலால் எல்லோருடைய பெருமையும் மங்கிவிடும், கீழ் இருக்கும் குழந்தைகளின் வாழ்க்கைக் கெடும். ஏன்!....இப்போதே உங்கள் முன்பே வாழ்க்கைப் பாதை பல கரடுமுரடான வழிகளில் பிரிந்து விடும். கை தவறிய பண்டத்தை பின்னர் நினைத்துப் ப்ரயோசனமில்லை என்பதுபோல், மிஞ்சிவிட்டால் பிறகு கட்டிப் பிடிப்பது சாத்தியமா? அப்போதெல்லாம் ரஞ்சனிடம்...அப்படி...சற்று அலக்ஷியமாய் இருந்துவிட்டீர்கள். இப்போது அவன் ஊருக்குப் போனபின் திருந்தி....வருந்தி என்ன ப்ரயோசனம்? மேற்கூறியவைகளை யெல்லாம்... ....பார்க்கவேண்டாமா?" என்று விஸ்தாரமாகக் கூறி கேட்டார்.

"எப்படி இருந்தாலும் இந்தத் தள்ளாத வயதில் நீங்கள் போவது சரியில்லை. எனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். எங்கள் குடும்பம் ஒன்றோடு தொலையட்டும். நீங்கள் சுத்தாத்மா. உங்கள் குடும்பத்திற்கு குறையோ, ஆபத்தோ வரக்கூடாது."

"நீங்கள் பயப்படவேண்டாம். நான் அவனைச் சந்திக்காமலேயே வெளிசெல்லாது—தூரவிருந்தே காரியத்தை முடிப்பேன். இதற்கெல்லாம் பயந்தால் நடக்குமா? உங்கள் நோக்கம் பார்வதிக்கு குறை ஏற்படக்கூடாது. அவ்வளவு தானே? அக் கடிதத்தை கிழிக்கவே வேண்டாம். ரகு மறுபடியும் வந்தால் என்னிடம் தொடர்பு விட்டுவிட்டதாக தைரியமாகக் கூறுங்கள். நானும் அப்படியே நடித்து சிக்கலின்றி காரியத்தை முடிப்பேன். ரகுவைக் கொண்டு சேர்ப்பேன். இனிமேல் என்னை வரும்படி அழைக்காதீர்கள். அவசியமானால் கடிதம் மூலம் விஷயங்களை பறிமாறிக்கொள்ளலாம்" என்று கூறிச் சென்றார்.

லக்ஷ்மியின் செவிகளில் அவர் கூறியது முழுவதும் விழ நியாயமில்லை. அதற்குள்தான் அவள் மனம் வேறு யோசனையில் மறுக்களித்துக்கொண்டு விட்டதே. ரகுவைப் பற்றி சதாசிவத்திடம் கூறிவிட்டாலும், அப்படி அவனை

விட்டுவிட அவள் உள்ளம் சம்மதிக்க மறுத்தது. அவர் சென்றுரோ, இல்லையோ? உடனே அவசர அவசரமாக மேலே ரகுவின் அறைக்குச் சென்றுள். ஒரு சுற்று சுற்றியவள் ஏமாற்றத்தோடு நின்றுள்.

அவள் ஏமாற்றத்திற்கு காரணம்? ரகுவின் நடத்தையை எடைபோட துடித்தது அவள் நெஞ்சம். அவன் பொருள்களைத் துழாவிப் பார்த்தால் சில துப்புகள் கிடைக்கும் என்பது அவள் நம்பிக்கை. அதற்காகத்தான் அவ்வளவு துரிதமாக வந்தாள். ரகுவின் அறை திறந்திருந்ததே தவிர அவன் பெட்டிகள் மேஜை, பீரோ முதலிய எல்லாம் பூட்டப்பட்டிருந்தன. அவைகளே காரணம்.

மேலே வந்தவேகத்தில், கீழிறங்கி முத்துவின் குடிசைக்குப் போனுள். முத்து வழியிலேயே செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தான்.

“முத்து! முத்து! எனக்கு ஒரு காரியம் செய்வாயா? யாருக்கும் தெரியாது நடக்கவேண்டும்” என்றுள்.

கையிலிருந்த குடத்தை அப்படியே வைத்துவிட்டு வந்தான். லக்ஷ்மி ரகஸ்யமாக “ரகுவின் அறையிலுள்ள பெட்டி, பீரோ எல்லாம், பூட்டப்பட்டிருக்கிறது. மறு சாவி போட்டாவது திறக்கவேண்டும், அல்லது உடைக்க வேண்டும். என்ன செய்யலாம், சொல். வா என்னுடன்” என்று அழைத்துப்போனுள்.

“அம்மா! அந்த சாவிகொத்தைக் கொடுங்க. அதிலே திறந்தால் சரிங்க. இல்லே உடைத்தால் போவுது” என்றவன் ஒவ்வொரு சாவியாகப் போட்டுப்போட்டு எடுத்தான். பயனில்லாது போகவே கட்டையால் ஓங்கி பிளந்து தள்ளினுன் பூட்டுக்களை. உடனே குறிப்பறிந்தவன்போல் “நான் கீழே போவட்டுங்களா?” என்று நகர்ந்தான்.

ஒரு பெட்டி பூராவும் சினிமா நக்ஷத்திரங்களின் புகைப் படமும், பார்க்க சகிக்காத கேவலமான படங்களும், ரகு தன் சகாக்களாகிய ஆண்-பெண் இருவருடனும் எடுத்த படங்களும், குவிந்து கிடந்தன. அது புகைப்பட பெட்டி போலும் என நினைத்தாள் லக்ஷ்மி.

மற்றென்றில், சிறுசிறு துண்டுகடிதங்களும், ஏதேதோ கதைப் புத்தகங்களும் இருந்தன. கடிதத் துண்டுகளை எடுத்துக்கொண்டு, அடுத்தப் பெட்டிக்குள் நகர்ந்தாள். அதில்தான் ரகு வகையாக அகப்பட்டுக்கொள்ளும்படியான அவனது டைரியும், தபால் மூலமும், நேராகவும் வந்த பெரிய கடிதங்களும் வரவேற்றன.

முதலில் டைரியைப் படிக்கும் ஆவலில்தான் அவள் மனம் தாவியது. அது சண்முகம் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்புதான் துவங்கியிருப்பதை தேதிமூலம் உணர்ந்தாள்.

.....இன்று மாலை நம் நண்பர்களோடு உல்லாசப்ரயாணம் கிளம்பவேண்டும். நான் நினைத்தபடியே ஒரு அதட்டு போட்டதும் அம்மாவிடமிருந்து பணம் பெயர்ந்து விட்டது அத்தனைக்கும் ஏது செலவு?

ரஞ்சனுக்கு அமெரிக்க ப்ரயாணம் என்று எல்லாம் ஒரே கும்மாளமடிக்கிறது. ஆனல் அம்மா மட்டும் அவன் பக்கம் சேர்ந்து சந்தோஷப்படாமல், என் பக்கம் பிரிந்து என் மனதுபடி, என் ஆட்டங்களுக்கெல்லாம் தடை கூறுது, ஆடுகிருள்.

அப்ப...என்ன சந்தோஷம்....அப்பா இறந்துவிட்டார். என்னை மடக்கி, அடக்கி, ஒடுக்க இனி யார். நானே ராஜா. வருத்தமாம் வருத்தம். வருத்தத்தில் தோய்ந்து குளிர் சோலைக்குப் போய்விட்டான் ரஞ்சன். திரும்பி வந்து சீக்கிரத்தில் அமெரிக்கா தொலைந்தால் நிம்மதியாக இருக்கலாம். அந்த பத்தாம்பசலி என்ன சொல்லப்போகிறதோ. 'அப்பா போய்விட்டார். நான் போகவில்லை'என்று உளறும். அவன் படிப்பு எக்கேடு கெட்டால் எனக்கேது கவலை. என் சுதந்திர வாழ்க்கைக்கு பங்கம் வராமல் இருக்க, அவன் போகவேண்டும்.

'ராமேச்வரம் போனலும் சனீஸ்வரன் விடாது'என்று நினைத்தேன். ஒழிந்தது ஒன்று. தொலைந்தது மற்ருென்று. ஆனல் இந்த அம்மா ஏதோ கிறுக்குப்பிடித்து எனக்கு எதிராக ஆட ஆரம்பித்திருக்கிருள், ஹூம்......... எலிக்கு பயப்படுமா இந்த சிங்கம்?

அம்மாவோடு கிழமும் சேர்ந்துவிட்டது. இந்த ரேவதியோ பட்டும் படாமலும் இருக்கிருள். இவர்களுக்கெல்லாம் ஒரு வழி செய்து பணத்தைப் பறிக்க என்னசெய்வது என்று நண்பனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். என்ன பதில் எழுதுவானே? என்று வருமோ? சீக்கிரம் எதிர் பார்க்கிறேன். நாளையே வந்தாலும் வரலாம்.

இதைப் படித்ததும் அந்தக் கடிதத்தையே நேரே படிக்கத் தோன்றியதால் கடிதக் குவியலில் அதைத்தேடிக் கண்டெடுத்தாள்.

''அன்புள்ள ரகுவிற்கு,

உன் கடிதம் கிடைத்தது. தீர யோசனை செய்தேன். நண்பர்கள் பலரைக் கலந்தாலோசித்தேன். முடிவு வெகு வேடிக்கையாக சுலபமாக முடிந்துவிட்டது.

ஊமத்தங்காய் என்றொன்றிருக்கிறது. உனக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதை வாங்கி நறுக்கி துண்டுகளாகச் செய்துக் கொள். ஒருநாள் புதியதாகச் செய்வதுபோல், 'ஐஸ் ப்ரூட் சாலட்' தயார் செய். அல்லது நிம்மதியாகக் கடையிலிருந்து தருவித்துவிடு. அதில் இந்தக் காயைப்போட்டு கலந்து உன் அருமை அம்மா, ரேவதி, அந்த கிழம் எல்லாவற்றிற்கும் கொடுத்துவிடு. எல்லாம் ருசிக்க ருசிக்கத் தின்றுவிடுங்கள். பிறகு........

பிறகு என்ன?...எல்லோருக்கும் பயித்தியம் பிடித்துவிடும். அவைகள் அலையும்போது உன் காரியத்தை நீ சுலபமாக முடித்துக்கொள்ளலாம். நம் ஜயம் சாயும். இதை நானாக எழுதவில்லை. நமக்கு சாதகமான டாக்டர் ஒருவரைக் கேட்டுதான் எழுதினேன்.

முக்கியமான விஷயம் நாம் முன்பு சந்தித்தபோதே பேசினோமே. ஒரு பெரிய சர்க்கஸ் கம்பெனி துவக்குவது அதிலிருந்து லக்ஷக்கணக்கில் சம்பாதித்து கோடீஸ்வரர்களாகி விடலாம் என்று. அதற்கு மேலும் நான்கு நண்பர்களை சேர்த்துவிட்டேன். என்று, எப்படித் துவக்கலாம் என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும்.

உனக்கு உன் தந்தை ஏராளமான சொத்து வைத்திருந்தும் நீ ஒரு விதத்தில் கஷ்டப்படுகிறாய். எனக்கு பணம் இல்லாதிருந்து நான் வேறு விதத்தில் இம்சை படுகிறேன்.

அந்தக்காயைக்கொடுத்துபரிசோதித்து, மேற்கொண்டு நடப்பவைகளை எழுது உதவி தேவையென்றால் நானே அங்கு வந்துவிடுகின்றேன்.

அன்புள்ள ப்ரிய நண்பன்
நடராஜன்.''

இதைப் படித்ததும் லக்ஷ்மியின் ரத்தம் உறைந்தது. எரிமலையே தலையில் உருண்டதுபோல் ப்ரமித்தாள்.

பார்த்து "குழந்தைகளே! உங்களோடுகூட நானும் சேர்ந்து நன்ருக சிரிக்கிறேன். எங்கம்மாள் செய்த பாக்யம் துதிக்கை இல்லாத யானையை பெற்றுவிட்டாள். என்னை பார்ப்பதற்கு ஒரு அணு டிக்கட் வைத்தால் எவ்வளவு காசு சேரும் தெரியுமா?" என்ருர் மகானுபாவர். அன்று கூட்டம் எள்ளுபோட்டால் எள்ளு விழாது இந்த வார்த்தையைக்கேட்டு எழுந்த சிரிப்பொலி அண்டத்தை அளாவியது.

பிறகு, கதைத்துடங்கி, வெகு ஸ்வாரஸ்யமாய் போய் சீதையின் ஸ்வயம்வர கட்டம் வந்தது. அப்பொழுது சீதையைப் பார்த்து அவளுடைய தோழிமார்கள் சதஸ்ஸைக் காட்டி கேட்கும் "இந்தரிலோ எவ்வனி பெண்ட்லாடுட விபுடு தெலுபு சீதா" என்கிற பாட்டில் ஐந்து ஆரு சரணங்கள் உள்ளன, இது அபினயத்திற்கு பொருத்தமாய் அமையக்கூடிய பாட்டு. பாவதர் அபினய சாஸ்திரமும் தனக்குத் தெரியும் என்பதைக் காட்டும் பொருட்டு ஒவ்வொரு அடிக்கும் தத்ரூபமாக அபினயம் செய்து காட்டினர். அடாடாடா......அந்த முகபாவங்களும், கண் வெட்டுக்களும் அத்புதம்...அத்புதம் என்ருல் மிகையாகாது. மறுபடியும் சதஸில் கரகோஷமும், சிரிப்பொலியும் வானை அளாவியது.

அன்றைய தினம் பெண்கள் கூட்டத்து மத்தியில், ஹரிகதையில் அபினயம் செய்யக்கூடிய லேடீ பாகவதர்களும் உட்கார்ந்து இருந்தார்கள். கதை செய்யும் பாகவதர் இந்த கதையும், அபினயமும் முடிந்த உடன் பெண்கள் கூட்டத்தைப் பார்த்து "ஏதோ எனக்குத் தெரிந்த வரையில் ஹாஸ்யமாக இருக்கட்டும் என்று நான் செய்து வைத்தேனே தவிர உண்மையில் என் சரீரமும், நானும் இதற்கு அருகதையா...அபினயம் தெரிந்த சகோதரிகள் இதை மன்னிக்கவேண்டும்" என்று சொல்லிய உடன் அவர்களுக்கெல்லாம் 'ஷாக்' அடித்ததுபோல் ஆய்விட்டது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து பறிதவித்தார்கள். "இந்த மாகானுபாவரிடத்தில் பாவ ரஸத்தில் சிந்தி போனது காணுது எங்களுக்கு தெரிந்த அபினயம். பெரியவாள் இப்படி சொல்லலாமா?" என்று வாய்விட்டே சொல்லிவிட்டார் ஒரு அம்மாள்.

183242

நிறைந்த குடமாகிய பாகவதர் தன்னைத் தாழ்த்திக் கொண்டு பேசிய உத்தம குணத்தை சபையே கொண்டாடியது.

விசேஷத் தபால் பில்லைகள்

இரண்டு நூற்றுண்டு விழாக்களையும், ஒரு சர்வதேச மகாநாட்டையும் ஒட்டி, இவ்வாண்டில் 3 தொகுதி விசேஷத் தபால் பில்லைகளை வெளியிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

முதல் தொகுதியில், இந்தியாவின் முதலாவது சுதந்திரப் போராட்டத்தின் நூற்றுண்டு விழாவின் ஞாபகார்த்தமாக இரண்டு தபால் பில்லைகள் வெளியிடப்படும். இதையடுத்து, இந்தியாவில் 19-வது சர்வதேச செஞ்சிலுவை மகாநாடு நடைபெறவிருப்பதையொட்டி அக்டோபர் மாதத்தில் மற்ருெரு தபால்பில்லை வெளியிடப்படும். இதைத் தவிர, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகியவிடங்களில் உள்ள சர்வ கலாசாலைகளின் நூற்றுண்டு விழாவின் ஞாபகார்த்தமாக மூன்று விசேஷத் தபால் பில்லைகளை வெளியிடவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் தபால் பில்லைகள் யாவும் "போட்டோக்ரப்யூர்" முறையில் இந்தியாவிலேயே அச்சிடப்படும்.

Jaganmohini (Aug. 1957) Regd. No. 2210

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அசூணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
நிர்மலநீரோடை

ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
கனைக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை

கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப் புமை
ஓவியப் பாசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா 12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைர்யலக்ஷ்மி

வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

வை. மு. பத்மினி

ரூ. 1 8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

சுத்தானந்த பாரதி
காந்தி கீர்த்தனம் 3-[illegible]

ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமஉரை 1-0
அபூர்வ ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.